Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி, (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
❖ பல் கட்டுவதற்கும்,
❖ பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
❖ இலவச கண் பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)
(சி-2195)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 03 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 துல்ஹஜ் 23 (15.02.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ் :137

# தென்னாபிரிக்க தேர்தலைக் கண்காணிக்க விடுதலைப் புலிகளின் குழுவொன்று அழைப்பு!

## இணையத்தள தகவல் தெரிவிப்பு

(கொழும்பு)

**தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலைக் கண்காணிப்பதற்கு - பத்து கண்காணிப்பாளர்களை அனுப்புமாறு தென்னாபிரிக்க அரசாங்கம், விடுதலைப் புலிகளைக் கோரியுள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டது.**

**இது தொடர்பாக, அந்த இணையத்தளச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது -**

போர்நிறுத்த காலத்தில் விடுதலைப் புலிகள் பலநாடுகளுக்கும் சென்று வந்ததாலேயே அவர்கள் இந்த வாய்ப்பைப் பெற்றனர்.

இந்த யுத்தநிறுத்த காலத்தில் புலிகள் பல நாடுகளுக்கும் சென்று தமது செயற்பாடுகளை விரிவாக்கியுள்ளனர். பல்வேறு நாடுகளுக்கும் சமஷ்டிமுறை தொடர்பாக அறிந்து கொள்ளச் சென்ற புலிகளுக்கு இந்த வாய்ப்புக் கிட்டியிருக்கிறது.

தென்னாபிரிக்க நாட்டில் குறிப்பிட்ட அளவில் இந்தியர்கள் நிரந்தரமாக வசித்துவருகின்றனர். அவர்களது வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காகவே தற்போது அந்த நாட்டில் ஆட்சியில் உள்ள தென்னாபிரிக்க தேசிய காங்கிரஸ், விடுதலைப் புலிகளிடம் கண்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசியல் நிலவரம் குறித்து பாலசிங்கம் - தமிழ்ச்செல்வன் பேச்சு

### சுவிற்சர்லாந்தில் நடைபெற்றது

(பேர்ண்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கமும், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும், இலங்கையின் தற்போதைய அரசியற் சூழ்நிலை குறித்து நேற்றுமுன்தினம் முக்கிய ஆலோசனையில் ஈடுபட்டனர்.

சுவிற்சர்லாந்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் - தென்னிலங்கை அரசியற் சூழ்நிலை மற்றும் நடைபெறப்போகும் நாடாளுமன்றத் தேர்தல் என்பன தொடர்பாக இருவரும் நீண்டநேரம் ஆலோசனை நடத்தியதாக விடுதலைப் புலிகளுக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி வெளியிடப்பட்ட செய்திகள் தெரிவித்தன.

ஐரோப்பிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சு இராஜதந்திரிகளைச் சந்தித்து நடத்திய பேச்சுகள் தொடர்பாக அரசியற்துறைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 13 எதிர்க்கட்சி முக்கியஸ்தர்கள் மீது லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு !

அனுருத்த ரத்வத்த, ரட்ணசிறி விக்கிரம நாயக்க உள்ளிட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் விமல் வீரவன்ச ஆகியோருக்கு எதிராக லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த, முன்னாள் அமைச்சர்கள் மங்கள சமரவீர, நிமால் சிறிபால டி சில்வா மற்றும் முன்னாள் நாடாளுமன்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கொத்தணி வாக்கு சாவடிகள்!

அடுத்தமாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வாக்குப்பதிவுகள் வட - கிழக்குப் பகுதியில் கொத்தணி முறையிலேயே இடம்பெறும். இவ்வாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு பகுதியில் அமைக்கப்படும் வாக்குச் சாவடிகளின் பாதுகாப்புக் கருதியே இந்த ஏற்பாடு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா உட்பட வன்னி மாவட்டங்களுக்கான வேட்புமனுக்களை அந்தந்த பிரதேச செயலகங்களில் தாக்கல் செய்யமுடியும்.

ஏனைய வடக்கு - கிழக்கு பிரதேச வேட்பாளர்கள் அந்தந்த பிரதேசத்தில் உள்ள தேர்தல் திணைக்களத்தினூடாக மனுக்களை தாக்கல் செய்யமுடியும் எனவும் தெரிவித்தார். நாளை மறுதினம் ஆரம்பித்து 24 ஆம் திகதிவரை வேட்புமனுத் தாக்கல் செய்ய முடியும் என தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (01)

## இரும்பு கேற்றில் அகப்பட்டு 16 மாதக் குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

இரும்புக் கேற் விழுந்ததில் அதன் கீழ் இருந்த 16 மாதக் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்தது.

இந்தச் சம்பவம் சில திணங்களுக்கு முனபு ஊர்காவற்துறைப் பகுதியில் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் சிவகுமார் மேரி கிசானி என்ற குழந்தையே மரணமடைந்தது.

மரணமடைந்த கிசானியின் சடலம் வைத்திய பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேற்படிச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

கிசானியுடன் அவரது இரண்டு சகோதரர்கள் கயிற்றினால் கட்டப்பட்ட இரும்பு கதவின் மேல் ஏறி விளையாடிக் கொண்டிருந்த சமயம் கயிறு அறுந்து கதவுக்குக் கீழ் இருந்த குழந்தை மீது விழுந்தது. இதனால் அவ்விடததிலேயே குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்தது. இதனுடன் அருகில் விளையாடிக் கொண்டிருந்த சகோதரர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

## உடுகம்பொல குறித்து விசாரிக்க 8 பேர் கொண்ட பொலிஸ் குழு

### பொலிஸ்மா அதிபர் நியமித்தார்

(கொழும்பு)

அத்துருகிரிய - மிலேனியம் சிற்றியிலிருநத இராணுவ மறைவிடத்தில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொல தலைமையிலான பொலிஸ் குழு நடத்திய தேடுதல் தொடர்பாக, எட்டுப்பேர்கொண்ட பொலிஸ் விசாரணைக்குழு ஒன்றை பொலிஸ்மா அதிபர் நியமித்துள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் தலைமையில் அமைக்கப்பட்ட இந்தக் குழுவில் எட்டு பொலிஸ் அதிகாரிகள் இடம் பெற்றுள்ளனர்.

இந்தக் குழுவில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உடுகம்பொல மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து அடுத்த வாரம் விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

இந்தத் தேடுதல் சம்பவத்துடன் தொடர்புடைய உடுகம்பொல மற்றும் பொலிஸ் அதிகாரிகள் இப்போது கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஐ.தே.கட்சிக்குத் தாவத் திட்டம்!

முன்னாள் அமைச்சரும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் கம்பஹா மாவட்ட முக்கியஸ்தருமான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து - எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடத் திட்டமிட்டிருப்பதாக செய்திகள் தெரிவித்தன.

கம்பஹா மாவட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் போட்டியிடுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா அனுமதி மறுத்ததினாலேயே ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே இந்த முடிவை எடுத்ததாகத் தெரியவருகிறது.

இவர் தமது கட்சியின் ஆதரவாளர்கள் மத்தியில் கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் பேசும்போது 'போதும் போதும்' என விரக்தியுடன் தெரிவித்ததாக தெரியவருகிறது.

இதனால், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ள ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே திட்டமிட்டிருப்பதாகவும், இவர் புத்தளம் மாவட்ட முதன்மை வேட்பாளராக ஐ.தே.கவில் போட்டியிட இருப்பதாகவும் கூறப்படுகிறது. புத்தளம் மாவட்டத்தில் இரண்டு கட்சிகளுமே எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலல் வெற்றிபெறுவது சிக்லுக்குரியதாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

2001 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இந்த மாவட்டத்தில் பல தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.தே.க. அமைப்பாளர் பதவி விலகினார்

ஐக்கிய தேசியக் கட்சியின் கொலன்னாவ தொகுதி அமைப்பாளரும், மேல்மாகாண சபை உறுப்பினருமான ஜனக மல்லி மாராச்சி தனது பதவியை விட்டு விலகுவதாக பிரதமர் ரணில் விக்கிரம்சிங்கவுக்கு ராஜினாமா கடிதத்தை அனுப்பிவைத்ததாகத் தெரியவருகிறது.

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடவுள்ள வேட்பாளர் பட்டியல் தொடர்பாக அதிருப்தி கொண்டிருந்த இவர், ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைத்துவத்துக்கு எதிராக பகிரங்க

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
mail 8-jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

## புதிய கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கட்டடத்தினை முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தியாகராசா மகேஸ்வரன் இன்று திறந்துவைக்கின்றார். (52)

எரிக்கணேஷ்

பல், மூக்குக் கண்ணாடி அகம்

564, 566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

- சங்குப் பற்களைக் கட்டவும்.
- நவீன முறையில் கிளிப் போடவும்.
- இலவசமாக கண்களை பரிசோதித்து தரமான கண்ணாடிகளை பெற்றுக்கொள்ளவும்.
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்டிக் லென்ஸ் பெற்றுக்கொள்ளவும்.
- வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்த கண்ணாடி கூடுகளை பெற்றுக்கொள்ளவும்.
- கட்டிய பற்களை சுத்தம் செய்யும், மாத்திரைகளைப் பெற்றுக்கொள்ள

நீங்கள் நாடவேண்டிய இடம்

எரிக் கணேஷ்

கிளைகள்

பழைய பொலிஸ் நிலையம் முன்பாக
இல.80, கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

T.P 021-222 2486
இல.91, கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில் சந்தி, கொக்குவில்.

(சி-2221)

# அதிபர் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பம் - வலயக் கல்வித் திணைக்களத்தால் கோரபட்டுள்ளது.

பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தியாலயம், கல்வியங்காடு இந்துத் தமிழ்க்கலவன் பாடசாலை, கதிரிப்பாய் சுப்பிரமணியம் வித்தியாலயம், நீர்வேலி வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலை, அச்செழு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, ஸ்ரீ வண்ணை வைத்திலிங்க வித்தியாலயம், அச்சுவேலி புனித திரேசா மகளிர் வித்தியாலயம், புத்தூர் மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை, சிறுப்பிட்டி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கே அதிபர் பதவிக்கான வெற்றிடங்கள் கோரப்பட்டுள்ளன. இத்துடன்,

புனித றோக்ஸ் றோமன் கத்தோலிக்க பாடசாலை, சன்மார்க்க வித்தியாலயம், புனித சாள்ஸ் மகா வித்தியாலயம், புத்தூர் ஸ்ரீ பஞ்சீக வித்தியாலயம், அச்சுவேலி மத்திய கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடம் ஆகிய பாடசாலைகளிலுள்ள அதிபர்கள் இந்த வருடம் ஓய்வு பெறவுள்ளதால், அந்த வெற்றிடங்களுக்கு அதிபர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

இந்த அதிபர் வெற்றிடங்களுக்கு அதிபர்களுடைய கடமைகளைக் கவனிக்கும் ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம். இந்தப் பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களுக்கு விணணப்பிக்க விரும்புவோர் - சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கேட்டுள்ளார்.

# மரவேலை பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்!

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் நடத்தப்படும் மரவேலை, பன்னவேலை பயிற்சிகளுக்கு சண்டிலிப்பாய் பிரதேசசெயல் பிரிவுக்குட்பட்டோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பயிற்சி நெறிகள், செயலகத்திற்கு முன்பாகவுள்ள தனியார் வீடொன்றில் நடைபெறவிருப்பதாகவும், இந்தப் பயிற்சியானது கிழமை நாட்களில் நடைபெறும் எனவும் பயிற்சியாளர்களுக்கு ஊக்குவிப்புத் தொகையாக மாதாந்தம் ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்பதாரர்கள் கிழமை நாட்களில் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (44)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 2.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், சட்டத்தரணி சோ.சிவஞானசுந்தரம் பிரதம விருந்தினராகவும், தி.யோகசபாபதிப்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (76)

## இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல்

கண்பார்வை குறைந்த பாடசாலை மாணவர்கள் சந்நிதியான் ஆசிரமத்தின் இயக்குநரோடு தொடர்புகொண்டால், இலவச வைத்திய சிகிச்சையின்பின் தரமான மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படுமென இயக்குநர் மோகனதாஸ் தெரிவித்தார். (76)

அருணலு

பெறுமதிமிக்க பரிசில்களை
5 ஆம் ஆண்டு புலமைப்பரிசு பெறும்
செல்வங்களுக்கு வழங்குகிறது.

உங்களுடைய பிள்ளை புலமைப்பரீட்சையில் சித்தியெய்தி அதிகப்படியான புள்ளிகளை 1ம். 2ம் அல்லது 3ம் இடத்தில் அவருடைய பாடசாலையில் பெற்றிருப்பதுடன் பரீட்சை எழுதும் போது அவரது அருணலு கணக்கில் குறைந்தது ரூபா 5,000/- மீதியாக இருந்திருந்தால். உங்களுக்கு எதிர்பாராத ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன.

நீங்கள் அருணலு கணக்கு வைத்திருக்கும் கொமர்ஷல் வங்கி கிளைக்கு பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்துடன் சென்று பெறுமதிமிக்க பணப்பரிசுகளை தட்டிக்கொள்ளுங்கள். நீங்கள் உங்களுடைய பிள்ளைக்கு அருணலு கணக்கு திறந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடையவில்லையா?

கொமர்ஷல் வங்கியின் அருணலு - ஒளிமயமான எதிர்காலத்தை புலமைப்பரிசு பெறும் செல்வங்களுக்கு வழங்குகிறது.

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்.

வாகன சாரதி தேவை

எமது விற்பனை வாகனத்திற்கு சாரதி தேவை. நேரில் வரவும்.

மில்க்வைற் தொழிலகம்
த.பெ.இல 77
525/2. கே.கே.எஸ் வீதி.
யாழ்ப்பாணம். (சி-2222)

யசோ இறபர் ஸ்டாம்
75/=
பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே
யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)

திறைஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந்த், சாக்ஷி நடித்த
வாஞ்சிநாதன்
காட்சி நேரம்:11.00, 2.45, 6.00, (பு.நே.)
ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
X-MEN ii
(சி-2196)

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா நடித்த
ஜெய்
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30 (பு.நே)
18 ஆம் திகதியிலிருந்து
எங்கள் அண்ணா
(சி-2197)

### அம்பாறை உள்ளூராட்சித் தேர்தலில்

# புதிய வாக்காளர்கள் வாக்களிக்க வாய்ப்புக்கள் வழங்க முடியுமா?

## தேர்தல் ஆணையாளரிடம் உயர்நீதிமன்றம் கேள்வி

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் எதிர்வரும் 21 ஆம்திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலின்போது, 2002 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்புக்கமைய வாக்களிப்பதற்குரிய வாய்ப்புக்கள் தொடர்பாக, உடன் அறிவிக்குமாறு - தேர்தல் ஆணையாளரை உயர் நீதிமன்றம் கேட்டுள்ளது.

குறித்த, உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்களை இடைநிறுத்துமாறுகோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் தொடர்பான மனு ஒன்றை பரிசீலித்த பின்னரே - உயர்நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

அம்பாறை மாவட்ட வாக்காளர்கள் நான்கு பேரால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில் பிரதிவாதிகளாக தேர்தல் ஆணையாளர் உட்பட நான்குபேர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

கல்முனை நகரசபை, சம்மாந்துறை அக்கரைப்பற்று, பொத்துவில், அட்டாளைச்சேனை, நிந்தவூர், ஆகிய பிரதேசசபைகள் ஆகியவற்றுக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு எதிர்வரும் 21 ஆம் திகதி வாக்களிப்பு இடம்பெறவுள்ளது.

இந்தத் தேர்தலில் 2000 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் இடம் பெறும் நபர்களுக்கே வாக்களிக்க அனுமதிவழங்கப்பட்டது என மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன் காரணமாகப் புதிதாக வாக்காளர்களாக பதிவுசெய்த மனுதாரர்கள் உட்பட 11 பேருக்கு வாக்களிக்கும் உரிமை அற்றுப் போயுள்ளதாக மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புதிய வாக்காளர்கள் வாக்களிக்கும் உரிமையை இழப்பதற்கு அனுமதிக்கமுடியாது என பரிசீலித்த பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்தார்.

வாக்குரிமைக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் தேர்தலை நடத்துவதற்குச் சட்டத்தில் இடமில்லை எனவும் பிரதம நீதியரசர் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து 2000 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்புக்குப் பதிலாக 2002 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பின்படி தேர்தல் நடத்துவதற்கு சந்தர்ப்பங்கள் இருக்கின்றதா என்பது குறித்து எதிர்வரும் 17ஆம் திகதி உயர்நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு பிரதம நீதியரசர் உத்தரவிட்டுள்ளார்.



ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கடந்த வியாழக்கிழமை இத்தாலி நாட்டு வெளியுறவு அமைச்சர் இக்னாஷியோ டிபேசை உரோமில் சந்தித்ததைத் காணலாம்.

# கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டவர்கள் கைதாகி விடுதலை!

(கொழும்பு)

கண்ணிவெடியகற்றும் பணிகளில் ஈடுபட்டு வந்த 48 உறுப்பினர்களைக் கொண்ட குழுவினர் படையினரால்கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் விடுதலைசெய்யப்பட்டனர்.

தகுந்த ஆதாரங்களின்றி மன்னார் தள்ளாடியிலுள்ள உயர்பாதுகாப்பு வலயத்தில் நுழைந்த போதே, இவர்கள் கைதுசெய்யப்பட்டதாகவும், இந்த கண்ணிவெடி அகற்றும் குழுவுக்கு நியூசிலாந்து நாட்டவர் ஒருவரே தலைமை வகித்திருந்ததாகவும் தெரியவருகிறது. இந்தச் சம்பவம் தொடர்பாக - கருத்துத் தெரிவித்த படைத்தரப்பு, உயர்பாதுகாப்பு வலயத்துக்கு வந்த கண்ணிவெடி அகற்றும் குழுவினர் தகுந்த ஆதாரங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை எனவும், அவர்கள் தமது அடையாள அட்டையைச் சமர்ப்பித்த பின்னரே இவர்கள் விடுவிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இந்தச் சம்பவத்தையடுத்து, இந்த 48 பேரைக் கொண்ட கண்ணி வெடி அகற்றும் குழுவின் தலைவர் இது குறித்து தம்மிடம் மன்னிப்புக் கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தக் குழுவின் வழிகாட்டியான நியூசிலாந்துப் பிரஜையைத் தவிர ஏனையோர் தமிழர் எனவும் மேலும் தெரியவருகிறது.

# இலங்கைக்கு வழங்கப்படுவதாக இருந்த 176 மில்லியன் நிதியுதவி நிறுத்தப்படலாம்!

## உலக வங்கி தெரிவிப்பு

இலங்கைக்கு வழங்கப்படவிருந்த 176 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியுதவி நிறுத்தப்படலாம் என, உலகவங்கி தெரிவித்துள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்திருக்கும் உலகவங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி பீற்றர் ஹரால்ட, இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நிலமைகளையடுத்து வீழ்சியடையத் தொடங்கிய இலங்கையின் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலையை அடைந்திருப்பதாகவும், வறுமை ஒழிப்புக்காக 125 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்க உலக வங்கி தீர்மானித்திருந்ததாகவும், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதால் இந்த உதவி தாமதிக்கலாம்,

அத்துடன், இலங்கையின் தென்பகுதியில் கிராம எழுச்சித் திட்டங்களுக்கு வழங்கப்படவிருந்த 51 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் வழங்குவதில் தாமதம் ஏற்படும் எனத் தெரிவித்துள்ள பீற்றர் ஹரால்ட், பொதுத தேர்தல் முடிவடையும்வரை உலகவங்கி எந்தவொரு நிதியுதவியையும் வழங்குவது சாத்தியமற்றது எனவும் மேலும் தெரிவித்தார்.

# நாம் யுத்தத்தை விரும்பவில்லை தாயக அபிவிருத்தியே முக்கியம்!

## மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ்

(கொழும்பு)

நாம் யுத்தத்தை விரும்பவில்லை. எமது தாயக தேசத்தின் அபிவிருத்தியையே விரும்புகிறோம். மக்கள் இதனைத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும் என மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டச் சிறப்புத்தளபதி ரமேஷ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பாடுமீன் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் எழுச்சிச்சங்கம நிகழ்வில் உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தி சர்வதேச சமூகத்துக்கு நாம் எமது நிலைப்பாட்டை தெளிவாக்கி இருக்கிறோம். எனவே, நாம் யுத்தத்தை விரும்புகிறவர்கள் அல்ல.

எமது தாயக தேசத்தின் அபிவிருத்தியை மேம்படுத்தவே நாம் கவனம் செலுத்திவருகின்றோம். எனவே, யுத்தம் எம்மீது திணிக்கப்படாமல் இருப்பதே ஆரோக்கியமானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

# வடமேல் மாகாண சபைக்கு வேட்புமனு கோரப்பட்டுள்ளது!

வடமேல் மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத்தாக்கல் இந்த மாதம் 27 ஆம் திகதி முதல், அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் எனத் தேர்தல் செயலகம் நேற்று அறிவித்தது.

இதன்படி, வடமேல் மாகாணத்திலுள்ள இரண்டு மாவட்டங்களில் தெரிவு அத்தாட்சி அதிகாரிகளிடம் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யலாம் என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதன் பிரகாரம், குருநாகல் மாவட்டத்திலிருந்து 34 உறுப்பினர்களும், புத்தளம் மாவட்டத்திலிருந்து 16 உறுப்பினர்களும் வடமேல் மாகாண சபைக்குத் தெரிவுசெய்யப்படவுள்ளனர். வேட்பு மனுத்தாக்கல் முடிவுற்றதும் தேர்தல் நடத்தப்படுவதற்கான திகதி அறிவிக்கப்படும்.

# பேதங்களை மறந்து ஒன்றிணைய மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சகல உறுப்பினர்களும் பேதங்களை மறந்து ஒன்றிணைந்து செயற்படுமாறு முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபகஷ வேண்டுகோள்விடுத்தார்.

நேற்று முன்தினம் மாலை தங்காலையில் இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர்களின் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

எதிர்வரும் பொதுத்தேர்தலின் போது, தமது கூட்டமைப்பின் பாரிய வெற்றிக்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் ஒத்துழைப்புடனும், அர்ப்பணிப்புடனும் செயற்படுவது மிக முக்கியமானது. நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் இந்த நாட்டின் தீர்க்கமான ஒரு தேர்தலாக அமையும். நாட்டின் வளங்களைப் பாதுகாத்து பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடைவது சிறிலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பியின் பொதுநோக்கம். வேலையில்லாப் பிரச்சினைக்குத் துரித தீர்வு ஒன்றை பெற்றுத்தரவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# மனோகணேசன்-பிரகாஸ் கணேசன் தம்மீது சேறு பூசுகின்றனராம்!

## ஜே.வி.பி முன்னாள் எம்.பி. குற்றச்சாட்டு

மேல்மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசனும், அவரது சகோதரர் பிரகாஸ் கணேசனும் ஜே.வி.பியினர் மீது சேறுபூசும் நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபட்டு வருகிறார்கள் என, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜே.வி.பி.யினர் கடந்த 39 ஆண்டுகாலப்பகுதியில் இரண்டு தடவைகள் நாட்டையும், நாட்டுமக்களையும் நேசித்த காரணத்திற்காக பல உறுப்பினர்களை இழந்துள்ளனர். ஐக்கிய தேசிய கட்சி ஜே.வி.பி உறுப்பினர்களை கொன்றது. இந்த சந்தர்ப்பங்களில் எந்தவொரு தமிழ்க் குடிமகனது உயிருக்கோ, உடலுக்கோ குறைந்தபட்சம் அவர்களது நிழல்களிலோ தீங்கு ஏற்பட்டிருக்கின்றதா? அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தை முன்வைத்து நிரூபிக்கமுடியுமா?

இந்த நாட்டில் தமிழர்களுக்கு துரோகம் இழைத்தவர்கள் யார் அவர்கள் வேறு எவரும் அல்ல.

பதவி வகிப்பவருக்கு மண்டியிட்டிருக்கும் ஐக்கிய தேசியக்கட்சி தான் தமிழர்களின் தன்மானத்தைக் குழிதோண்டிப் புதைத்தது என்பதை ஆணித்தரமாகக் கூற விரும்புகின்றேன்.

1948 முதல் இன்றுவரையான வரலாற்றைப் புரட்டிப்பார்க்கும் போது, இந்த உண்மை தன்மானமுள்ள எந்தவொரு தமிழருக்கும் தெரியவரும்.

தமிழர்களின் உண்மையான எதிரிகள் யார் என்பது புரியும்.

இனவாதிகள் என்று குறிப்பிடப்படுகின்ற வரலாறு ஐக்கிய தேசிய கட்சியினரின் 1977 ஆம் ஆண்டுக்கு பின்னைய வரலாறேயாகும்.

தமிழர்களுக்கு தீங்கு இழைத்தவர்கள் இனக்கலவரத்தைச் தூண்டி தமிழர்களின் வாழ்வை நிர்மூலமாக்கியவர்கள் ஐக்கிய தேசியக்கட்சியினரே.

1979 ஆம் ஆண்டு பயங்கரவாதச் சட்டத்தைக் கொண்டுவந்து தமிழ் இளைஞர், யுவதிகளைச் சிறையில் அடைத்தவர்களும் ஐக்கிய தேசியக்கட்சியனரே,

1981 ஆம் ஆண்டு குண்டர்களை அனுப்பி யாழ்ப்பாணத்தில் நடந்த தேர்தலை குழப்பியவர்களும் ஐக்கிய தேசியக்கட்சியினரே,

யாழ்.நூலகம் தீயிடப்பட்டு அரிய தமிழ் நூல்கள் அழிக்கப்பட்டமையும் இந்தக் காலப்பகுதியில்தான் நடந்தேறியது.

1982 ஆம் ஆண்டு சர்வஜன வாக்குரிமையை நடத்தி மக்களின் தேர்தல் உரிமையை பறித்தார்கள்

1983 ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை குட்டிமணி, தங்கத்துரையின் கண்களை குருடாக்கியவர்களும் ஐக்கிய தேசியக்கட்சியினரே.

அதேபோன்று, இந்திய -இலங்கை உடன்படிக்கையை மேற்கொண்டு இந்திய இராணுவத்தின் மூலமாக தமிழர்களை கொன்றொழித்தவர்களும் ஐக்கிய தேசியக்கட்சியாகும்.

இவ்வாறான ஒரு கட்சியுடன் கூட்டமைப்பு ஏற்படுத்திக்கொண்டு ஜே.வி.பியினரை இனவாதிகள் எனக் கூறுவது எந்தவிதத்திலும் பொருத்தமானதல்ல என ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் மேலும் குறிப்பிட்டார்.(எ)

# விஷ வாயுவைப் பயன்படுத்தி கொள்ளையில் ஈடுபட்டவர் கைது

(கொழும்பு)

விஷவாயுவைப் பயன்படுத்தி பல்வேறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் குருநாகல் பகுதியில் இடம்பெற்றது.

மேற்படி நபர் குருநாகல் வைத்தியசாலையில் இரசாயனப் பகுப்பாய்வுத்துறையில் அலுவலகராகப் பணியாற்றுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஐம்பது மாதங்களாக பல்வேறு கொள்ளைச் சம்பவங்களில் தனியாக ஈடுபட்டு வந்தவர் இவர் என்றும் கூறப்படுகின்றது.

இவரிடம் இருந்து 10 லட்சம் பெறுமதியான தங்கநகைகளும், 30 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும், பலகொள்ளைகளில் இவர் ஈடுபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில், பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(01)

# 19 வயதுக்குட்பட்ட உலக கிண்ண கிரிக்கெட்போட்டி இன்று ஆரம்பம்!

ICC U/19 CRICKET WORLD CUP
BANGLADESH 2004

(பங்களாதேஷ்)

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையேயான சர்வதேச ஒருநாள் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் இன்று பங்களாதேஷில் ஆரம்பமாகின்றன.

இந்தப் போட்டிகளில் விளையாடுவதற்காக, இந்த மாதம் 9 ஆம் திகதி சகல நாடுகளினது 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணிகள் டாக்காவிற்கு சென்றுள்ளன.

12,13,14 ஆம் திகதிகளில் பயிற்சி ஆட்டங்கள் நடைபெற்றன. இந்த 3 நாட்களும் ஒவ்வொரு அணியும் இரண்டு பயிற்சிக் ஆட்டங்களில் பங்குபற்றின. 19 வயதுக்குட்பட்ட உலகக்கோப்பை கிரிக்கெட்போட்டியின் முதற் போட்டிகள், இன்று பங்களாதேஷ் மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இலங்கை அணிக்கும் - சிம்பாப்வே அணிக்கும் இடையில் 'போக்கரா' மாவட்ட விளையாட்டரங்கிலும், இங்கிலாந்துக்கும் - நேபாளத்துக்கும் இடையில் 'எம்.ஏ.அசிஸ்' விளையாட்டரங்கிலும், பங்களாதேஷிற்கும் - நியூஸிலாந்துக்கும் இடையில் 'பங்கபந்து' தேசிய விளையாட்டரங்கிலும், பாகிஸ்தானுக்கும்-பப்புவா நியூகினி அணிகளுக்கும் இடையில் 'குல்னா' பிராந்திய விளையாட்டரங்கிலும் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

19 வயதுக்குட்பட்ட உலகக் கோப்பைப் போட்டிகளில் நான்கு பிரிவுகளாக அணிகள் பிரிக்கப்பட்டுள்ளன.

'ஏ' பிரிவில் அவுஸ்ரேலியா, இலங்கை, சிம்பாப்வே, கனடா ஆகிய நாடுகளின் அணிகளும், 'பி' பிரிவில் தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, நேபாளம், உகண்டா ஆகிய நாடுகளின் அணிகளும், 'சி' பிரிவில் இந்தியா, நியூஸிலாந்து, பங்களாதேஷ், ஸ்கொட்லாந்து ஆகிய நாடுகளும் 'டி' பிரிவில் மேற்கிந்திய தீவுகள், பாகிஸ்தான், பப்புவாநியூகினி, அயர்லாந்து ஆகிய நாடுகளும் என நான்கு பிரிவுகளாக அணிகள் பிரிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரிவுகளில் முதல் இரண்டு இடங்களைப்பெறுகின்ற அணிகள் அடுத்த சுற்றுப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு தகுதிபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணக் கல்விக்கோட்ட கரப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணக் கோட்ட பாடசாலைகளுக்கு இடையில் கடந்த மூன்று நாட்களாக ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வந்த கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

இதன் அடிப்படையில், 15 வயதுப்பிரிவில் சென்ஜோன்ஸ் கல்லூரி முதலாம் இடத்தையும், சென்ஜோசப் வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும், யாழ்.மத்தியகல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

17 வயதுப் பிரிவில், யாழ்.மத்தியகல்லூரி முதலாம் இடத்தையும், புனித சாள்ஸ் மகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தையும், சென் ஜோன்ஸ் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றன.

19 வயதுப்பிரிவில், சென்.ஜோன்ஸ் கல்லூரி முதலாம் இடத்தையும், யாழ்.மத்தியகல்லூரி இரண்டாம் இடத்தையும், சென்.ஜோசப் வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

யாழ்.கோட்டப் போட்டிகளில் முதல் இரு இடங்களையும் பெற்ற அணிகள் யாழ்.வலய மட்டத்தில் விளையாடுவதற்கான தகுதியினை பெற்றுள்ளன. (58)

# பாகிஸ்தான் செல்வதற்கு இந்திய அணிக்கு அனுமதி

இந்திய கிரிக்கெட்அணி பாகிஸ்தான் நாட்டில் சுற்றுப்பயணம் செல்ல இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

ஐ.சி.சி திட்டப்படி, அடுத்தமாதம் பாகிஸ்தான் நாட்டில் இந்தியஅணி சுற்றுப்பிரயா ணம் செய்யவேண்டும். ஆனால், இந்திய அணியின் கப்டன் சௌரவ் கங்கூலி பாகிஸ்தானின் பாதுகாப்புக் குறித்து அச்சம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், இது தொடர்பாக பிரதமர் வாஜ்பாய், துணைப் பிரதமர் அத்வானி, மத்திய நிதி அமைச்சர் ஜஸ்வந்த்சிங், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா ஆகியோர் நேற்றுக் காலை ஆலோசனை நடத்தினர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த ஜஸ்வந்தசின்ஹா - இந்தியஅணி பாகிஸ்தான் செல்வது தொடர்பான அனைத்து விடயங்களையும் அலசி ஆராய்ந்தோம். ஆலோசனை முடிவில் இந்தியஅணி திட்டமிட்டபடி பாகிஸ்தான் செல்வது என முடிவுசெய்யப்பட்டது.

விளையாட்டு திகதிகளை இந்திய கிரிக்கெட்சபையும், பாகிஸ்தான் கிரிக்கெட்சபையும் கலந்துபேசி முடிவுசெய்யும் என்றார்.

மக்களவைத் தேர்தல் வரும் சமயத்தில் இந்திய அணிக்கு பாகிஸ்தானில் ஏதேனும் அசம்பாவிதம் நேர்ந்தாலோ, தோல்விகள் ஏற்பட்டாலோ அது பா.ஜ.கவின் தேர்தல் வெற்றியைப் பாதிக்கும் என்று, இந்திய அரசு கருதியது. எனவே, தேர்தலுக்குப் பிறகு பாகிஸ்தான் செல்லலாம் என்று இந்திய கிரிக்கெட் சபைக்கு உள்துறை அமைச்சகம் பரிந்துரைத்தது.

ஆனால், பாகிஸ்தானில் பாதுகாப்பு ஏற்பாடுகளை பார்வையிட்ட இந்திய கிரிக்கெட் சபைக்குழு பிரச்சினை ஏதும்இல்லை, பாதுகாப்பு ஏற்பாடுகள் திருப்திகரமாக இருப்பதாக கூறிவிட்டது. இதையடுத்து, வேறுவழியில்லாமல் இந்தியஅரசும் அனுமதி வளங்கியுள்ளது. இந்தியஅரசின் முடிவை பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் சஹாார்யர் கான் வரவேற்றார்.

# விளையாட்டு

## யாழ்.வலய பாடசாலைமட்ட சதுரங்கச் சுற்றுப் போட்டி!

யாழ்.வலய பாடசாலை மாணவர்களிடையே சதுரங்க சுற்றுப்போட்டி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டி, யாழ்.வலயக்கல்விப் பணிமனையில் எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டிகள் ஆண், பெண் இருபாலாருக்கும் 15,19 வயதுப்பிரிவுகளில் குழுநிலைப் போட்டியாக நடைபெறவுள்ளது.

போட்டிகளில் பாடசாலை ஒன்றிலிருந்து ஒரு பிரிவுக்கு 7 வீரர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 6 வீரர்கள் ஒரு போட்டியில் பங்குபற்றுவர் மற்றைய வீரர்பதில் வீரராக கருதப்படுவார்.

தனிநபர் போட்டிக்கு ஒரு பாடசாலையிலிருந்து இருவர் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் எனவும், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளரின் ஒப்புதலுடன், யாழ்.வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.அருணகிரிராஜா சகல யாழ். வலய பாடசாலைகளுக்கும் அறிவித் தார்.(58)

# கிரிக்கெட் வீரர் சித்து பா.ஐ.கவுக்கு பிரசாரம்

இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கும், அரசியலுக்கும் எப்போதுமே தொடர்பு உண்டு. முன்னாள் வீரர்களான கீர்த்தி ஆசாத், சேத்தன் சௌகான், ஆகியோர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று எம்.பியாகி இருக்கிறார்கள். கீர்த்தி ஆசாத் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் எம்பியாக இருந்தார். சேத்தன் சௌகான் இரண்டுமுறை எம்.பியாக இருந்தார்.

இதேபோல, மொகீந்தர் அமர்நாத், மதன்லால் ஆகியோர் பாரதீயஜனதா கட்சியில் இணைந்து இருந்தனர். அந்த வகையில் தற்போது இடம்பிடித்து இருப்பவர் நவ்ஜோத்சிங்சித்து.

முன்னாள் அதிரடி ஆட்டக்காரரும், தொலைக்காட்சி வர்ணனையாளருமான நவ் ஜோத்சிங் சித்து, வர இருக்கும் நாடாளுமன்ற தேர்தலில் பாரதீய ஜனதாவுக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரம் செய்யவுள்ளார்.

பாரதீய ஜனதா பொதுச் செயலாளர்களில் ஒருவரான பிரமோத்மகாஜன் சமீபத்தில் சித்துவை சந்தித்து பேசினார். அப்போது அவர் பாரதீய ஜனதாவுக்கு ஆதரவாக தேர்தல் பிரசாரம் செய்ய ஒப்புக்கொண்டார். ஆனால், அவர் தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் பட்டோடி 1996 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு தோற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கபில்தேவ், கோவிந்தாவுக்கு வலைவீசுகின்றது காங்கிரஸ்!

நாடாளுமன்றத்தேர்தல் பிரசாரத்திற்கு நட்சத்திரப்பட்டாளத்தை களத்தில் இறக்கிவிட பாரதீய ஜனதாக்கட்சி தீவிரமாகியுள்ளது. இந்தி நடிகர்கள் சத்துருகன் சின்கா, வினோத் கன்னா, தர்மேந்திரா, நடிகை ஹேமமாலினி, விஜயசாந்தி, கௌதமி சுதாசந்திரன் ஆகியோர் பா.ஜ.கவுக்கு தீவிர பிரசாரம் செய்யவுள்ளனர்.

ஆந்திராவில் நடிகை ரோஜா தெலுங்கு தேசம் - பாரதீய ஜனதா கூட்டணிக்கு பிரசாரம் செய்யவுள்ளார். தமிழ் நாட்டில் அ.தி.மு.க. நடிகர், நடிகைகளின் பிரசாரம் பாரதி ஜனதா வேட்பாளர்களுக்கு பலம்கொடுப்பதாக இருக்கும்.

பிரபல தொலைக்காட்சி நடிகர் நிதிஷ்பரத்வாஜ், நடிகை ஸ்ருதி, மல்கோத்ரா இராணியும் பாரதீய ஜனதா வேட்பாளர்களுக்கு பிரசாரம் செய்யத்தயாராகி வருகின்றனர். இந்த மாபெரும் நட்சத்திர பட்டாளங்களுக்குப் பதிலடி கொடுக்க காங்கிரசும் தயாராகி வருகின்றது.

பிரபல கிரிக்கெட் வீரர் கபில்தேவ், இந்தி நடிகர் கோவிந்தா ஆகிய இருவரையும் இழுக்க காங்கிரஸ் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. அவர்கள் இருவரிடமும் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

கபில்தேவ் ஜாட் இனத்தைச் சேர்ந்தவர் எனவே, அவர் மூலம் உத்தரப்பிரதேசம், ஹரியானா, ராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள கணிசமான ஜாட் இனத்தவர்களை கவரமுடியும் என்று காங்கிரஸ் நினைக்கிறது.

அத்தோடு தெற்கு டெல்கி நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட வாய்ப்புத் தருவதாகவும் கபில்தேவுக்கு ஆசை காட்டப்பட்டு வருகின்றது. காங்கிரஸ் வலையில் கபில்தேவ் சிக்குவாரா என்று தெரியவில்லை.

அதுபோல நடிகர் கோவிந்தாவுக்கும் உத்தரப்பிரதேசத்தில் உள்ள ஏதாவது ஒரு தொகுதியில் போட்டியிட வாய்ப்புத் தருவதாக காங்கிரஸ் தலைவர்கள் கூறிவருகின்றனர்.

# 25 நாடாளுமன்ற உறுப்பினர்களை கழற்றிவிடுகிறது பாரதீய ஜனதா!

தற்போதைய எம்.பிக்கள் 25 பேருக்கு மீண்டும் போட்டியிட இடம் வழங்குவது இல்லை என்று, பாரதீய ஜனதா மேலிடம் முடிவு செய்துள்ளது. நாடாளுமன்ற தேர்தல் - வருகிற ஏப்ரல் மாதம் நடப்பது உறுதியாகிவிட்டது. இதைத் தொடர்ந்து கட்சிகள் அணிஅணியாகத் தேர்தல் களத்தில் இறங்குகின்றன.

இந்தத் தேர்தலில் பாரதீய ஜனதாக் கட்சி 300 இடங்களில் வெற்றி பெற்றே ஆகவேண்டும் என்று உறுதியாக செயற்படுகிறது. மொத்தம் உள்ள 545 இடங்களில் 2/3 பங்கு தொகுதிகளை தேசிய ஜனநாயகக் கூட்டணி கைப்பற்றவேண்டும் என்று, பாரதீயஜனதா விரும்புகிறது.

மேலும், நாடு முழுவதும் ஒவ்வொரு தொகுதியிலும் யாரை பா.ஜனதா வேட்பாளராக நிறுத்தினால் வெற்றிக் கனியைப் பறிக்கலாம் என்று தெரிந்துகொள்ள இரகசியக் கணக்கெடுப்பு ஏஜென்சிகளின் உதவியை பாரதீய ஜனதா நாடியுள்ளது. ஒவ்வொரு ஏஜென்சிக்கும் 80 தொகுதிகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஏஜென்சிகள் தங்கள் ஆய்வை முடித்து பாரதீய ஜனதாக் கட்சியிடம் அறிக்கை கொடுக்கும்.

நாளை டெல்கியில் பாரதீய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்ற குழுக் கூட்டம் நடைபெறுகின்றது. இந்தக் கூட்டத்தில் இரகசிய ஏஜென்சிகள் கொடுக்கும் அறிக்கைகள் மீது ஆய்வு செய்யப்படும். இந்தக் கூட்டத்தில் பிரதமர் வாஜ்பாய், துணைப் பிரதமர் அத்வானி, பா.ஜனதா தலைவர் வெங்கய்யா நாயுடு ஆகியோர் கலந்துகொள்கிறார்கள்.

தற்போதைய நிலவரப்படி ஏறத்தாழ 25 எம்பிககளுக்கு மீண்டும் போட்டியிட அனுமதி கொடுப்பதில்லை என்று, பாரதீய ஜனதா மேலிடம் முடிவுசெய்திருக்கிறது.

மேலும், பாரதீய ஜனதா தனது சாதனைப் புத்தகத்தில் அயோத்தியில் இராமர் கோயில் கட்டுவது பொதுசிவில் சட்டத்தை அமுல்படுத்துதல் போன்றவற்றை இடம்பெறச் செய்யும் என்று கருதப்படுகிறது. காஷ்மீருக்கு தனி அந்தஸ்து வழங்கும் 370 ஆவது அரசியல் பிரிவை நீக்குவது பற்றியும் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதைத் தவிர இந்துதத்துவக் கொள்கைகளும் இடம்பெறும் என்று கருதப்படுகிறது.

# அண்ணா அறிவாலயத்தில் கருணாநிதி-சோனியா சந்திப்பு

தி.மு.க. தலைவர் கருணாநிதியைக் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி நேற்று முன்தினம் சந்தித்துப் பேசினார். பேச்சுவார்த்தையில் பாண்டிச்சேரி தொகுதி குறித்து எந்தவித தீர்வும் எட்டப்படவில்லை.

தி.மு.க. தலைமையகமான சென்னை அண்ணா அறிவாலயத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. அண்ணா அறிவாலய வளாகத்தில் உள்ள கலைஞர் அரங்க நுழைவாயில் தி.மு.க. துணைப்பொதுச் செயலாளர் மு.க.ஸ்டாலின், முனனாள் மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு ஆகியோர் சோனியாவை வரவேற்று உள்ளே அழைதததுச் சென்றனர். பின்னர் கருணாநிதி உள்ளிட்டோர் சோனியாவை வரவேற்றனர்.

கருணாநிதிக்கு சோனியாகாந்தி சால்வை அணிவித்தார். சோனியாவிற்கு கருணாநிதி பொன்னாடை அணிவித்தார். பின்னர் சோனியாவிற்கு தேனீர்விருந்து அளித்தார். அப்போது மக்களவைத்தேர்தல் ஏற்பாடுகள் குறித்து இருவரும் விவாதித்தனர். சந்திப்பிற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய சோனியா காந்தி-

கருணாநிதியுடனான சந்திப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது. அ.தி.மு.க - பா.ஜ.க.கூட்டணியை தோற்கடிக்கக் கூடிய கூட்டணியாக எங்கள் கூட்டணி உள்ளது.

ஜெயின்கமிஷன் இறுதியறிக்கையில் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலைக்கும், தி.மு.கவுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஜெயின் கமிஷன் இடைநிலை அறிக்கையில் கூறப்பட்டிருந்த சில கருத்துக்களால், கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டது உண்மைதான்.

நான் வேற்றுநாட்டைச் சேர்ந்தவர் என்று முதல்வர் ஜெயலலிதா கூறிவருகிறார். என்னுடைய மனச்சாட்சிப்படி நான் இந்தியப் பெண்ணாகத்தான்வாழ்கின்றேன். இது குறித்து மற்றவர்கள் கூறுவதை என்னுடைய மனதிலிருந்து துடைத்துவிடுகிறேன்.

பாண்டிச்சேரி தொகுதி குறித்து இன்னும் ஓரிரு நாட்களில் உடன்பாடு எட்டப்படும். நாகர்கோவில் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் தொகுதிகள் பற்றிய பிரச்சினைகளை எங்கள் கட்சி பொதுச் செயலாளர் கமல்நாத்தே தீர்த்துவிடுவார் என்று கூறினார். இந்தச் சந்திப்பின்போது, கமல்நாத் மற்றும் காங்கிரஸ் மூத்த தலைவர் பிரணாப் முகர்ஜி ஆகியோரும் உடனிருந்தனர்.

# வெள்ளிக்கிழமையன்று நடத்தாமல் சனியன்று தேர்தலை நடத்துங்கள்!

## அப்பாத்துரை விநாயகமூர்த்தி வேண்டுகோள்

(கொழும்பு)

ஏப்ரல் 2 ஆம் திகதி முஸ்லிம்களின் வழிபாட்டுக்குரியதினமான வெள்ளிக்கிழமையாதனால், பொதுத் தேர்தலை ஏப்ரல் 3 ஆம் திகதியான சனிககிழமைக்கு மாற்றுமாறு, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி கேட்டுள்ளார்.

தேர்தல் ஆணையாளருக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அந்தக் கடிதத்தில் . மேலும் தெரிவித்திருப்பதாவது - தற்போது கலைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றம், மாகாணசபைத் தேர்தலை சனிக்கிழமை நடத்துவதெனத் தீர்மானித்திருந்தது.

அப்படியிருக்கும்போது எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று பொதுத் தேர்தலை நடத்தாமல், அதற்கு அடுத்தநாள் நடத்துவதே நீதியானதாக அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



இதேவேண்டுகோள் அடங்கிய கடிதம் ஒன்றை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் அனுப்பிவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் மேலும் இரு புதிய பாடநெறிகள்

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் இரண்டு புதிய பாடநெறிகள் ஏப்ரல் மாதம் முதல் கற்பிக்கப் பட இருப்பதாகத் தெரியவருகிறது.

மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சின் ஏற்பாட்டிலேயே இந்த இருபாட நெறிகளும் ஆரம்பிக்கப்பட இருப்பதாக யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் என்.யோகராஜன் தெரிவித்தார்.

ஆசிரியர்களுக்கான ஆங்கில மொழியிலான கற்பித்தல் தொடர்பான டிப்ளோமா கற்கைநெறி, மற்றும் பல்கலைக்கழகங்களில் அழகியல் கல்வி தொடர்பான பாடங்களில் பட்டம் பெற்றவர்களுக்கான அழகியல் டிப்ளோமா கல்வி முதலிய பாடங்களே கற்பிக்கப்படவுள்ளன.

இப்பாடநெறிகளுக்கான விணணப்பங்கள் - இம்மாத இறுதிப்பகுதியில் கோரப்படவுள்ளன எனவும், இப்பாடநெறிகள் யாவும் 'சிற்றி அன் கில்ஸ்' அமைப்பின் ஏற்பாட்டிலேயே கற்பிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## இராணுவ மோட்டார் சைக்கிள் விபத்து இரு படையினருக்கு எதிராக குற்றப்பத்திரிகை

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் இராணுவ மோட்டார் சைக்கிள்- பொதுமகன் ஒருவரை மோதிய சம்பவம் குறித்து, நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த 9 ஆம் திகதி நண்பகல் சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியிலுள்ள இராணுவ முகாமிலிருந்து வந்த மோட்டார் சைக்கிள் - வீதியால் சென்றுகொண்டிருந்தவர்மீது மோதியதில் அவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, பொலிஸ் நிலையத்தில் பிரஸ்தாபநபர் முறைப்பாடு செய்திருந்தார். இந்தச் சம்பவம் குறித்த முறைப்பாட்டை விசாரணை செய்த பொலிஸார் - சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்றுக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்தனர்.

இந்தக் குற்றப்பத்திரத்தை விசாரணை செய்த நீதிவான்- சம்பவம் தொடர்பாக விசாரணை செய்து, அறிக்கையை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டனர். (202)

### புதுமுக மாணவர்களுக்கு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட புதுமுக மாணவர்களுக்கான கலந்துரையாடல் - நாளை திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம் பெறவுள்ளதரல், சகல புதுமுக மாணவர்களையும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

### பேடன்பவல் நினைவுதினம்

உலக சாரணர் தினத்தையொட்டிய பேடன்பவல் தினப் போட்டிகள்- இன்று காலை ஒன்பது மணி முதல் ஒரு மணிவரை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் குருளைச் சாரணர், சாரணர், சிரேஷ்ட சாரணர், திரிசாரணர், குருளைச் சாரணர் தலைவர் மற்றும் சாரணத் தலைவர்களுக்கான போட்டிகள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (44)

## பதின்நான்கு வயதுச் சிறுமி மீது பாலியல் பலாத்கார முயற்சி

குருநகர் பகுதியில் பதினான்கு வயது சிறுமியை இளைஞன் ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்தார்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழனன்று மாலை இடம்பெற்றது. இந்த சம்பவத்தில் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவர் யாழ் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது -

சிறுமி பாடசாலையில் மேலதிக வகுப்பை முடித்துக்கொண்டு, மாலை வேளை குருநகர் அண்ணாசிலையடி வதியூடாக சென்று திரும்பிக் கொண்டிருந்தார். அவ்வீதியால் வந்து கொண்டிருந்த இளைஞன் அவரைப் பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்தார். இந்த விடயம் தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### யு.என்.எச்.சி.ஆர். உதவியுடன் தண்ணீர்த்தாங்கி

(தென்மராட்சி)

மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாசாலையில் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் நிதியுதவியுடன் தண்ணீர்த் தாங்கி ஒன்று அமைக்கப்பட்டு, நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன்மூலம் இங்கு கல்வி கற்கும் 300 இற்கும் மேற்பட்ட மாணவர்களும், ஆசிரியர்களும் தமது நீர்த்தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள முடிவதாகப் பாடசாலை அதிபர் செ.சிவஞானம் தெரிவித்தார். (24)

### விசேட கலந்துரையாடல

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சொண்ட் செயலகத்தில் - எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள விசேட கலந்துரையாடலில், யாழ்.யு.என். எச்.சி.ஆரின் யாழ்.மாவட்ட வெளிக்களக் காரியாலய தலைமை அதிகாரி கே.சுகி முறாட்டா கலந்துகொண்டு, திட்ட நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடவுள்ளார்.

இதில் யாழ்.மாவட்டத்திலுள்ள ஐம்பது கிராமியமட்ட நிறுவனத் தலைவர்கள் கலந்துகொண்டு, தமது தேவைகள் தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளனர்.

## அளவெட்டி தபாலகத்திற்கு புதிய காணி கொள்வனவு

அளவெட்டிப் பகுதியில் தபாலகம் ஒன்றை அமைப்பதற்காகப் புதிய காணியொன்று அவ்வூர் மக்களால் கொள்வனவு செயயப்பட்டு, அரசிடம் கையளிக்கப்பட்டது. இதுதொடர்பாகச் சம்பிரதாயபூர்வ கையளிப்பு வைபவம் அண்மையில் நடைபெற்றது.

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வசிக்கும் அளவெட்டிப் பகுதியைச் சேர்ந்த மக்களின் நிதியுதவிமூலமே, இந்தக் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை காலமும் அளவெட்டி தபாலகம் - தனியார் கட்டடமொன்றிலேயே இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட காணியின் உறுதிப் பிரதி- அளவெட்டி தபாலக அதிபர் ச.சுப்பிரமணியத்திடம் - அளவெட்டி பொதுமக்கள் பிரதிநிதிகளால் கையளிக்கப்பட்டது.

இதனையடுத்து, புதிய காணியில் நவீன வசதிகளுடன் கூடிய தபாலகமொன்றை அமைப்பதற்கான முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

### காலமாகிவந்த கதை அறிமுகவிழா

புலம்பெயர்ந்து பிரித்தானியாவில் வாழும் ஈழத்து சிறுகதை ஆசிரியர்களுள் ஒருவரான அ.இரவியின் 'காலமாகிவந்த கதை' நூலின் அறிமுக அரங்கு - நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு, நாடக அரங்கியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலை இலக்கிய ஆர்வலர்களை இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

### பாராட்டுவிழா

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை திருவள்ளுவர் சேவாமன்ற சனசமூகநிலைய செயலாளர் பொன் கனகரத்தினம் யாழ். மாவட்ட சமாதான நீதவானாக நியமனம் பெற்றதைப் பாராட்டிக் கௌரவிக்கும் வைப வம் இன்று மாலை 4 மணிக்கு நிலைய முன்றலில் நடைபெற வுள்ளது. (44)

## வெள்ளிவிழாவை முன்னிட்டு மருத்துவபீடத்தில் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

மருத்துவபீட மாணவர்கள் - யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் ஆரம்பித்த இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, கண்காட்சி ஒன்று நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி முதல் தொடர்ந்து ஐந்து தினங்கள் இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் 1978 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, சென்ற ஆண்டுடன் 25 ஆண்டு நிறைவை அடைந்துள்ளது. இதனையொட்டி மருத்துவ பீட மாணவர்களினால் மாபெரும் கண்காட்சி ஒன்று நடத்தப்படவுள்ளது. இந்தக் கணகாட்சியில் யாழ். குடாநாட்டில் அதிகரித்துவரும் நோய்களும், அதற்கான காரணங்களும், உயர்தரப் பரீட்சையில் தோற்ற இருக்கும் மாணவர்களின் கல்விநிலை தொடர்பான விளக்கங்களும் மருத்துவபீட மாணவர்களினால் வழங்கப்படவுள்ளன.

### பழந்தமிழ் நூல்கள் கணினிமயம்

கிடைப்பதற்கு அரிதான, மறுபதிப்பு இல்லாத தமிழ் நூல்களை- கணினியில் பதிவுசெய்து, இலவசமாக சொண்ட் எனப்படும் அபிவிருத்திக்கான சமூகசேவை நிறுவனங்களின் வலையமைப்புக்கு வழங்கி வருகிறது. பழந்தமிழ் நூல்களை அழிந்து விடாது காப்பாற்றும் ஒரு முயற்சியாக, இந்தப் பணியை இந்நிறுவனம் செய்துவருகிறது.

இத்தகைய பழைய தமிழ் நூல்களுள்ளவர்கள் - இதனைச் சொண்ட் அலுவலகத்தில் கொடுத்து கணினியில் பதிவுசெய்யலாம். 525/2 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல-021-222 6700. எனும் முகவரிக்கு தொடர்பு கொள்ளலாம்.

### பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில்

## வெடிபொருள் அகற்றப்பட்ட பகுதி பிரதேச செயலரிடம் ஒப்படைப்பு

பருத்தித்துறை - கற்கோவளம் பகுதியில் மிதிவெடி அகற்றப்பட்ட ஒருபகுதி நேற்றுமுன்தினம் பருத்தித்துறைப் பிரதேசசெயலரிடம் ஒப்படைக்கப்பட்டது.

பருத்தித்துறையில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுவரும் 'டெனிஸ்' மிதிவெடி அகற்றும் பிரிவினரே, இந்தப் பிரதேசத்தின் வெடிபொருள் அகற்றப்பட்ட 5 ஆயிரத்து எண்ணூற்று 80 சதுர மீற்றர் பகுதியை பருத்தித்துறை பிரதேசசெயலரிடம் கையளித்தனர்.

இந்நிகழ்வில் யாழ்.செயலகத்தைச் சேர்ந்த மிதிவெடி அகற்றும் செயற்பாட்டுப் பிரிவு அலுவலர் எல்மோ ஆனந்தராசா - 'டெனிஸ்' மிதிவெடி அகற்றும் பிரிவினரின் யாழ்.மாவட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் சாமுவேல் பூநிலா, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் செயற்பாட்டலுவலர் பிலிப்ஸ், அப்பகுதி கிராம சேவையாளர் கே.சிவசண்முகம், பருத்தித்துறை பிரதேசசெயலர் ஆ.சிவகாமி மற்றும் அப்பகுதி மக்கள் போன்றோர் கலந்துகொண்டனர்.

இந்தப் பகுதியில் மேலும் இரு பிரதேசங்களிலும் வெடிபொருள் அகற்றும் பணிகள்இடம் பெற்று வருவதாகவும், அப்பகுதிகள் இன்னும் ஓரிரு மாதங்களில் பொது மக்கள் பாவனைக்கு வழங்கப்பட விருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ப)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் 175 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்பட்ட மலர் வெளியீட்டுரை நிகழ்த்திய பருத்தித்துறை பிரதேசசபை நூலகர் எஸ்.திருச்செல்வத்திடமிருந்து பாடசாலை அதிபர் செல்வமலர் சுந்தரேசன் மலர்ப்பிரதியைப் பெறுவதைப் படத்தில் காணலாம்.



## விளையாட்டு அரங்கம்

# சொதப்பாதிங்க செய்துகாட்டுங்க



ரிக்கிபொண்டிங் சொதப்பீற்றிங்களே



சௌரவ் கங்கூலி செய்துகாட்டுகிறோம்

முடிந்தும் முடியாத உணர்ச்சித் தொடரான இந்திய - அவுஸ்ரேலிய அணிகள் மோதிய டெஸ்ட் போட்டித் தொடரைத் தொடர்ந்து, மூவேந்தர்களில் சக்கரவர்த்தி யார் என்பதை நிர்ணயிக்கும் போட்டித் தொடரான இந்திய, அவுஸ்ரேலிய, சிம்பாப்வே அணிகள் மோதின. இந்த முத்தரப்புப் போட்டியில், கிரிக்கெட் உலகின் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தும் வகையில், புறக்கணிக்கமுடியாத புது வேகத்தில் சிலிர்த்தெழுந்த சிம்பாப்வே அணி, ஒரு வெற்றியைக்கூடப் பெறமுடியாமல் போனாலும், சாதித்தவை பல.

இந்தப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிகளைத் தவிர, கடைசி இரு லீக் போட்டிகளின் தன்மையை ஆராய்வோம். கடந்த முதலாம் திகதி பேர்த் மைதானத்தில் 11 ஆவது லீக் போட்டி இந்திய - அவுஸ்ரேலிய ஆணிகளுக்கிடையில் நடைபெற்றது. பகலிரவுப் போட்டியாக நடைபெற்ற இந்தப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கியது.

இந்திய அணியில் கடந்த நான்கு போட்டிகளில் விளையாடாத - ஆரம்பத் துடுப்பாட்டத்தில் அணிக்கு வலுவான அடித்தளத்தை இட்டுக்கொடுப்பவர்களும், எதிரணியை முதல் 15 ஓவர்களில் பயமுறுத்தி விடுபவர்களுமான, 'மாஸ்டர் பிளாஸ்டர்' சச்சின் ரமேஸ் டெண்டுல்கர், மின்னல் வேக அதிரடி ஆட்டக்காரர் வீரேந்தர் சேவாக் ஜோடி - இந்தப் போட்டியில் விளையாடும் என போட்டியின் முதன்நாள் அறிவிக்கப்பட்டதும், இந்திய ரசிகர்கள் வானம்வரை துள்ளினார்கள்.

ஆனால், போட்டியன்று சேவாக் அதிர அடித்தாலும், சச்சின் 5 ஓட்டத்துடன் ஆட்டமிழக்க - ரசிகர்களுக்கு காலின்கீழ் பூமி நழுவிவிட்டது போலாகிவிட்டது.

**FIVE MAN ARMY** என்று வர்ணிக்கப்படும் சச்சின், ராவிட், லக்ஸ்மன், கங்கூலி, சேவாக் ஆகியோரில், சச்சின் தான் ஆட்டமிழந்தார் என்றால், மீதி நான்குபேருக்கும் என்ன ஆகிவிட்டது. ராவிட் (13), கங்கூலி (1), சேவாக் (32), லக்ஸ்மன் (1) என அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். ஒருநிலையில் 101 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை இழந்து இந்திய அணி திணறியது.

ஆனால், அந்த இக்கட்டான நிலையில் கைகொடுத்தவர்கள் யுவராஜ்சிங்கும், பின்வரிசைப் பந்து வீச்சாளர்களும்தான். இல்லாவிட்டால் 150 இற்குள் இந்திய அணி நாறியிருக்கும்.

இந்தப் போட்டியில் முரளி கார்த்திக், இர்பான் பதான், பாலாஜி ஆகியோரின் வழமைக்கு மாறான அற்புத துடுப்பாட்டத்தால், இந்திய அணி 200 ஓட்டங்களைத் தாண்டியது.

ஆனால், அடுத்து ஆடத்தொடங்கிய அவுஸ்ரேலியா 5 விக்கட்டுக்களை இழந்து 32 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தது. இதிலும் அவுஸ்ரேலிய அணியின் முதல்தர துடுப்பாட்ட வீரரான அடம் கில்கிறிஸ்ட், அன்ரூ சைமன்ஸ் ஆகியோர் இந்திய அணியைச் சக்கை வேறு, சாறு வேறாகப் பிழிந்துவிட்டார்கள்.

அன்ரூசைமன்ஸ் - சிக்சருக்காக அடித்த பந்து, ரசிகர்களின் வரிசையைத் தாண்டி ஸ்ரேடியத்தின் கூரை மேல் விழுந்தது. பந்தை எடுக்க முடியாமல் இந்தி அணி திணறியதைப் பார்த்து, கில்கிறிஸ்ட்டும், சைமன் ஸூம் நமட்டுச் சிரிப்புச் சிரித்தனர்.

அந்தச் சிக்சரே அந்தப்போட்டியின் **VERY LONG... LONG... LONG... SIXER.** அதனுடனாவது திருந்தியிருக்கவேண்டும் இந்திய அணி.

இதில் விட்டகுறையை 12 ஆவது லீக் போட்டியில் சிம்பாப்வே அணிக்கு ஒரு சாத்து சாத்தி, நிவர்த்தி செய்திருக்கவேண்டும். ஆனால், அந்தப் போட்டியிலும் தங்கள் திருவிளையாடலைக் காட்டிவிட்டார்கள். நீண்ட காலத்துக்குப்பின் இந்திய அணி நல்ல நிலைக்குத் திரும்புகிறது என்று பார்த்தால், பங்களாதேஷ் அணியைவிட மோசமாக ஆகிவிடும் போல் தெரிகிறது. அதற்குள் உலகின் முதல்தர அணியாவதற்கு வேறு கனவு காண்கிறார்கள். அந்தக் கனவு பலித்திருக்கும், அவுஸ்ரேலிய அணியுடனான டெஸ்ட் போட்டியில் விளையாடுவதுபோல் விளையாடியிருந்தால்.

சிம்பாப்வே அணி 12 ஆவது போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று, முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. ஆனால், பதான, பண்டாரி ஆகியோரின் பந்து வீச்சைச் சமாளிககமுடியாமல், 135 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

சரி, இந்திய அணி 20 ஓவரில் வெற்றி இலக்கை - விக்கெட் இழப்பின்றி அடையும் என்று எதிர்பார்த்தால், 6 விக்கட்டுக்களை இழந்து 30 ஆவது ஓவரில் தான் வெற்றி இலக்கை அடைந்தது. அதிலும் டெண்டுல்கர் 3 ஓட்டங்களுடனும், ராவிட் 10 ஓட்டங்களுடனும், யுவராஜ் 4 ஓட்டங்களுடனும், சேவாக் 24 ஓட்டங்களுடனும், லக்ஸ்மன் 32 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க, பாதானியின் நிதான ஆட்டத்தால் இந்திய அணி பாடுபட்டு வென்றது.

உண்மையில் முன்னர் இந்திய அணியின் பந்து வீச்சில்தான் குறையிருந்தது. அதை நிவர்த்தி செய்தால் உலகத்தில் அதிசிறந்த துடுப்பாட்ட வரிசையைக் கொண்ட இந்திய அணி - உலகின் முதல்தர அணியாக உருவாகமுடியும் என்று விமர்சகர்கள் கருத்து தெரிவித்தனர்.

இப்போது பந்து வீச்சின் குறை நிவர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. வெண்ணெய் திரண்டு வர, தாளி உடைந்ததுபோல, துடுப்பாட்ட வரிசை காலை வாருகிறது.

இப்படியான நிலையில் இறுதிப் போட்டியில் இந்திய அணி நிகழ்த்திய திருவிளையாடல் - ரசிகர்களுக்கு மகா எரிச்சலைக் கிளப்பின. இறுதிப் போட்டிகளின் விபரங்களை அடுத்தவாரம் ஆராய்வோம்.

~ மாயவன் ~

# சகாப்தம் தொடர்கிறது



றொஜர் பெடரர் - இளமை இதோ இதோ

அவுஸ்ரேலிய ரென்னிஸ் போட்டிகள், மகளிர் தரப்பைப் பொறுத்த வரை பெல்ஜியம் சார்ந்த விடயமாகிவிட்டது. அதேவேளை ஆண்கள் ஒற்றையர் போட்டிகள் - ஐரோப்பா சார்ந்ததாக அமைந்துவிட்டது என்று, சிறிது விசாலமாகக் கூறலாம். இறுதிப் போட்டியில் கலந்து கொண்டவர்கள் சுவிற்ஸர்லாந்தின் றொஜர் பெடரரும், ரஷ்யாவின் மராட் சபானும் ஆவர். இதில் எல்லோரும் அறிந்த விடயம் றொஜர் பெடரர் வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிக் கொண்டமை. ஆனால், அதற்கு முன்னதான நிகழ்வுகளில், உலகின் தரவரிசை ஒன்றைத் தன்னகத்தே கொண்ட அன்டி றொடிக் மற்றும் நான்குமுறை சம்பியன் கிண்ணம் வென்ற அன்ரீ அகாஸி இருவரையும் புறம் தள்ளியே சபீன் இறுதிப்போட்டிக்கு வந்திருந்தார். ஆனால், இறுதிப்போட்டியில் பெடரர் விளையாடிய அழகை ரசிப்பவராக, சபீனைப் பெடரர் ஆக்கிவிட்டதுதான் துரதிர்ஷ்டம். இறுதிப்போட்டிக்கு அன்டிறொடிக் அல்லது அகாஸி வந்திருந்தால், அந்தப் போட்டியின் தரமே வேறாக இருந்திருக்கும். அதுபோக, இன்று பெடரரின் கணிப்பீடு மிக உயர்வானது. 14 முறை கிராண்ட ஸ்லாம் வென்ற பீட் சாம்பிராசுடன் இவர் ஒப்பிடப்படுகின்றார்.

பெடரரிடம் இவ்வருடம் நான்கு கிராண்ட் ஸ்லாம்களையும் (பிரெஞ்ச், அவுஸ்ரேலிய, அமெரிக்க, பிம்பிஸ்டன்) வெல்லமுடியும் என்று நினைக்கிறீர்களா என்று கேட்டபோது, இதனைப் பற்றிக கூறுவது கடினமானது. அதாவது, யாருககுமே கடினமானது என்கிறார். இருந்தாலும் தனக்கு இவ்வருடத்தில் அந்தச் சந்தர்ப்பம் இல்லாமற் போகவில்லை என்பதையும் சூசகமாக எடுத்துக் காட்டுகிறார். ஒரு புறம் சபீன் "ஆமான" வீரர்களைத் தோற்கடித்து இறுதிப்போட்டிக்குவர, ஜீபான் கார்லோஸ் பெரேய்வா ஆகியோரைப் போராடி வென்று, இறுதியில் கபீனைத் தூசாகத் தட்டியவர் பெடரர். கடந்த ஏழுமாத காலத்தில் விம்பிள்டன், ரென்னிஸ் மாஸ்டர்ஸ் கப், தற்போது அவுஸ்ரேலியக் கிண்ணம் என்று, மூன்று சம்பியன்ஷிப்களை வென்றுள்ளார். பெடரர் தற்போதுள்ள நிலையில் ஏனைய மூன்று கிராண்ட் ஸ்லாம்புகளையும் ரென்னிஸ் வீரர்கள் வரிசையில் இச்சாதனையைப் புரிந்த மூன்றாவது நபராக இருப்பார். இதற்கு முன்னதாக அவுஸ்ரேலிய றொட் லீவரும், அமெரிக்க டொண்பட்ஜ் என்பவரும் மட்டுமே இந்தச் சாதனை புரிந்தவர்கள்.

- மக்டலின்.

| பிரிவு A | பிரிவு B | பிரிவு C | பிரிவு D |
|---|---|---|---|
| இலங்கை | தெ.ஆபிரிக்கா | இந்தியா | மேற்கிந்தியத்தீவுகள் |
| அவுஸ்ரேலியா | இங்கிலாந்து | நியூசிலாந்து | பாகிஸ்தான் |
| சிம்பாப்வே | நேபாளம் | பங்களாதேஷ் | பப்புவாநியூகினியா |
| கனடா | உகண்டா | ஸ்கொட்லன்ட் | அயர்லாந்து |

**பங்களாதேஷில் இருபது நாட்கள் திருவிழா ஒன்று ஆரம்பிக்கிறது. அதுதான் 19 வயதிற்குட்பட்ட உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள். இதற்கான முன்னோடி நிகழ்வு வங்கபந்து தேசிய அரங்கத்தில் 5000 பேர்வரை பங்குகொண்ட பல்வேறு நிகழவுகளுடன் ஆரம்பமாகியது. இன்று ஆரம்பமாகும் இந்தப் போட்டிகளில் பதினாறு நாடுகள் பங்குகொள்கின்றன. மொத்தம் 54 ஆட்டங்கள், ஐந்து நகரங்களில் உள்ள எட்டு மைதானங்களில் நடைபெறவுள்ளன.**

**ஆரம்ப நிகழ்வுகளுக்கு வந்திருந்த பல்லாயிரக்கணக்கானவர்களில் முதன்மையானவர்கள் இரண்டுபேர். ஒருவர் வங்க நாட்டின் பிரதமர் காலிதாசியா மற்றவர் பிரதான ICC அதிகாரி மல்கம் ஸ்பீட்.**

**இந்த நாட்டில்கூடும் சர்வதேச இளைஞர்கள் வங்க இளைஞர்களுக்கு பெரும் வேகத்தைக் கொடுப்பார்கள் என்பது உண்மை. இந்தப் போட்டியில் பங்கு கொள்ளும் இளைஞர்களுக்கு மதிப்புக் கொடுக்குமுகமாக வங்களாதேஷ் 300 அங்கத்தவர் கொண்ட நாடாளுமன்றம் தன் செயற்பாடுகளை நேரகாலத்தோடேயே முடக்கிக் கொண்டது ஒரு முக்கியமான விடயம். தற்போதைய 19 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் கிண்ணத்துக்கு உரியவர்கள் அவுஸ்ரேலிய அணியினர்.**

**நாங்கள் இந்தமுறையும் கிண்ணத்தைத் தக்கவைத்துக் கொள்வோம் என்றும், உபகண்டத்தில் போட்டிகள் நடைபெறுவதும், உபகண்ட அணிகளும் எமக்குச் சிறிது அச்சுறுத்தல் தரும் விடயம்தான் என்கின்றனர்.**

**இந்த ஐந்தாவது உலகக்கிண்ணப் போட்டி வரிசையில் 2000 ஆம் ஆண்டில் இலங்கை இரண்டாம் இடம்பெற்றது. இந்தப் போட்டியில் இந்தியா வெற்றி வாகை சூடியது.**

# நிரந்தரம் எதுவென்று புரிந்தவர்

(சென்றவாரத் தொடர்ச்சி)

**1998** இல் இவர் இந்தியச் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்தபோது, இயல்பாகவே இவரில் முனைப்படைந்திருந்த மனிதம் சடாரென்று ஒரு சந்தர்ப்பத்தில் விழித்துக்கொண்டது. அதுதான் என்றும் நிரந்தரமாகப் பேசப்படபோகின்ற ஒருவிடயமாகவும் இருக்கப் போகின்றது. குஷ்டரோகத்தால் பாதிக்கப்பட்ட பெற்றோரின் பிள்ளைகள் பாதுகாக்கப்படும் சிறுவர் இல்லமொன்றுக்குச் சென்றிருந்தபோது, அந்தச் சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார். மிகவும் உயர் தகமைகொண்ட பத்துப்பேரை அவுஸ்ரேலிய அணியின் தலைவனாக வழிநடத்தி மைதானத்தில் இறங்குவதைவிட இது மிகவும் முக்கியமானது என்றார். தற்போது அவர் ஓய்வு பெற்றுள்ள நிலையில் வேண்டப்படுபவர்களுக்கு வேண்டியதைச் செய்யும் சந்தர்ப்பமும், நேரமும் இவருக்குக் கூடுதலாகவே கிடைக்கும் என்று நம்பலாம்.

1998 கொல்கத்தாவின் ஈடன் காடன் மைதானத்தில் இந்தியாவிடம் நான்கேநாட்களில் அவுஸ்ரேலிய அணி தோல்வியுற, அந்த ஐந்தாவது நாள் இவரை ஒரு அளப்பரிய சேவையினுள் கொண்டு சென்று தள்ளியது. அதுதான் அருட்தந்தை ஸ்ரீவன்ஸின் சந்திப்பு. அதன் ஊடாக கொல்கத்தாவிலிருந்து, நாற்பது மைல்கள் தொலைவில் இருந்த பராக்பூர் எனும் ஊரில் அமைந்திருந்த உதயன் சிறுவர் நிலைய விஜயம். அன்றிலிருந்து இன்றுவரை தன் வாழ்வின் ஒருபகுதியாக உதயன் சிறுவர் நிலையத்திற்கான பணிகளையும் ஸ்ரீவ்வோ வரித்துக்கொண்டிக்கிறார். அவர் ஒரு குஷ்டரோகிகள் நிலையத்துக்குச் சென்றிருந்தபோது அங்குள்ள நிலைகண்டு எண்பது, சக்கர நாற்காலிகளை அன்பளிப்புச் செய்திருக்கிறார். தற்போது உதயன் சிறுவர் நிலையத்தில் இருக்கும் பிள் ளைகள் தொகை முன்னூறு. இந்த நிலையில் பெண்பிள்ளைகளுக்கு ஒரு தனியிடம் தேவை என்பதால் ஸ்ரீவ் தனது முயற்சியால இருபது லட்சம் ரூபா (இந்தியரூபா) சேர்த்து கட்டடத்தொகுதித் தேவையை நிறைவேற்றியுள்ளார். இதன்பின்னர் அதற்குத் தேவையான கட்டில்கள், மெத்தைகள் அத்தியாவசியமான மருந்துப் பொருட்கள் என்று அவுஸ்ரேலியாவில்தான் அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் என்று எல்லோரிடமுமிருந்து பெற்று கப்பல்கப்பலாக கொல்கத்தாவுக்கு அனுப்பிவைத்துள்ளார்.



ஸ்ரீவ் குடும்பம் - குடும்பம் ஒரு கோயில்

ஸரீவ்வோவின் அடுத்த திட்டம் - 200 பெண குழநதைகளுக்கான தங்ககம் ஒன்றை அமைப்பதேயாகும். வண.ஸ்ரீபன்ஸ் இது தொடர்பில் கருத்துத் கூறும்போது, இதற்கான பூர்வாங்கத் திட்டமிடல் வேலைகள் எல்லாம் முடிவடைந்து விட்டன. மார்ச் அல்லது ஏப்ரலில் ஸ்ரீவ் கொல்கத்தாவந்ததும் திட்டத்தை ஆரம்பித்து விடலாம் என்கிறார்.

இன்னொருபுறம், இன்னொரு காரியத்தையும் செய்திருக்கிறார் ஸ்ரீவ். இந்த நிலையத்திலிருந்து லக்ஷ்மி குமாரி என்னும் சிறுமிக்கு ஆயுள்புரிந்த அனுசரணையாளர்களாக ஸ்ரீவும் அவர் மனைவி லினெட்டும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். லக்ஷ்மி, "ஸ்ரீவ் (**DADA**) என்பது வங்காள மொழியில் மூத்த சகோதரன் சுருக்கமாக (**DA**) கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றுள்ளபடியால், எங்களுடன் கூடியளவு நேரத்தை இனி அவரால் ஒதுக்கமுடியும்" என்று சந்தோஷப்படுகிறார். சஞ்சேய் சோரென் எனும் சிறுவன் - அவர் பற்றிக் கூறும்போது, அண்ணா எப்போது வந்தாலும் எங்களுடன் சேர்ந்து கிரிக்கெட் விளையாடுவார். என்று குதூகலப்படுகின்றான். ஆலோகா நாயக் எனும் சிறுமி - "அண்ணாவுக்கு மூன்று குழந்தைகள் இருப்பது எங்களுக்குத் தெரியும். அடுத்த முறை வரும்போது அவர்கள் எல்லோரையும் பார்க்க எனக்கு நிரம்ப ஆசை" என்றார்.

ஸ்ரீவ்வோ இறுதிச் சந்தர்ப்பமாக துடுப்பாட சிட்னி மைதானத்தில் இறங்கும்போது, இந்திய வீரர்கள் மைதானத்தில் இருபுறம் அணிவகுத்துநின்று, அவரைப் பாராட்டி, கைலாகு கொடுத்து, தடத்தைநோக்கிச் செல்ல வழிநடத்தவிரும்புவதாகக் கங்குலி ஸ்ரீவிடம் கோரிக்கைவிடுத்தாராம்.



இந்த முகத்தில் ஸ்ரீவின் இதயம்

அதனை வேண்டாமென்று அன்புடன் மறுத்த ஸ்ரீவ், நான் உணர்ச்சிப் பிளம் பாகிவிடுவேன் போல் இருக்கிறது என்றாராம் தளதளத்த குரலில் இதனால்தான் அவா, அணியையே காப்பாற்றிய 80 ரண்களை எடுத்து ஆட்டமிழந்த போது, 11 இந்திய வீரரும் ஸ்ரீவைச் சுற்றிவளைத்துக்கொண்டனர் போலும்.

ஸ்ரீவ்வோவின் இத்தகைய சிந்தனையால உணர்வுகளும், பரிவும், சிறப்பாகச் செயற்பாடும் பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள இந்தச் சிறுவர், சிறுமியரின் மனதில்பல காலமாகிப் படிந்துள்ளதே. அவர் பெயரே அவர்களுக்குக் குதூகலத்தைச் கொடுத்திருக்கிறதே. ஏறத்தாழ ஒருலட்சம் பேர் கிரிக்கெட் ரசிகர்கள் சூழ அமர்ந்து, ஈடன் காடன் மைதானத்தில் அவரது ஆட்டத்தை ரசித்து விட்டுப்போயிருப்பார்கள். ஆட்டங்களின்போது பல்வேறு உணர்வுகள் கதம்பமாகப் புரண்டிருக்கும். ஆனால், ஸ்ரீவ்வோவின் உணர்வுகள் அந்த தேவைகள், தேவைப்படும் சிறுவர் சிறுமியருடன் அல்லவா சங்கமித்துவிட்டது. எவ்வளவு உயர்ந்த மனிதர் இவர்.

எதிர்காலத்தில் இவரது கிரிக்கெட் சாதனைகள் முறியடிக்கப்படலாம். இவரை விடச் சிறந்த வீரர்கள், அணித்தலைவர்கள் அவுஸ்ரேலியாவில், மற்றும் சர்வதேசரீதியில் உருவாகலாம். அதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. ஆனால், இப்போதைய ஸ்ரீவ்வோவின் இன்னொரு கோணத்தில் எத்தனைபேர் சிந்திக்கப்போகிறார்கள். செயற்படப்போகிறார்கள். அதிலும் தாமாவே உணர்ந்து இப்படியொரு வாழ்க்கையின் பக்கத்தை நோக்கி ஸ்ரீவ்வோவின் கிரிக்கெட் வாழ்வில், இந்திய மண்ணில் ஒரு டெஸ்ட் தொடரில் இந்தியாவின்பதினொரு மனிதரைத் தோற்கடிக்க முடியவில்லையே என்று கவலைப்பட்டார். ஆனால், அதற்கெல்லாம் மேலாக மனித குலத்தின் வெற்றிவீரனாகநிரந்தர இடத்தைப் பிடித்துவிட்டாரே இது தான் சாதனை.

**- ஜோசப் கிருஷ்ணா-**

---

# ஒலிம்பிக்கை விடக் கூட எதிர்பாக்கிறோம்

இந்திய - பாகிஸ்தான் கிரிக்கெட் தொடர் என்பது கிரிக்கெட் விளையாட்டுக்கும் அப்பால் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டமைவது இரண்டு வருடங்களுக்கு முன் இரண்டு அணுஆயுத பலமிக்க நாடுகளாகப் பரஸ்பரம் முறுகல் நிலைக்குள்ளாகிய நாடுகள் என்றவகையில் எதுவித கிரிக்கெட் உறவுகளும் சாத்தியமில்லை என்றவகையில் நோக்கப்பட்டதாக அமைந்தாலும், இன்று இரண்டு நாடுகளும் களத்தில் சந்திக்கும் சந்தர்ப்பம் ஒன்று சாத்தியமாகப் போகின்றது. அதுவும் ஏறத்தாழ பதினான்கு வருடங்களுக்குப் பிறகு அரசியல்ரீதியாக ஒரு சமரச



இன்சமாம் உல்ஹக்
ப்ளீஸ் வராமவிட்டிடாதீங்க



பாகிஸ்தான் அணி - இந்தியர்களே வருக வருக...

நிலையை எட்ட முயற்சிக்கும் பேச்சுவார்த்தைகள் பற்றிய சாதகமானநிலை தோன்றிய வேளையிலேயே, இரு நாடுகளுக்கிடையிலுமான கிரிக்கெட் தொடர் நடைபெறப் போகின்றது. இப்போது - அநேகமாக மார்ச், ஏப்ரலில் இந்திய அணி பாகிஸ்தான் மண்ணில்போய் இறங்கும் என்பது நிச்சயமானநிலையில் அரசியல் சர்ச்சைகள் இல்லை. ஆனால், வேறு சிலபிரச்சினைகள் பற்றிய கருத்துக்கள் வெளிவருகின்றன.

மைதானத்திலும், மைதானத்துக்கு அப்பாலும் உணர்ச்சிக் கொந்தளிப்புகள் ரசிகர் மத்தியில் ஏற்படும்போது, அது இரு நாடுகளிலும் பலபிரச்சினைகளை உருவாக்கும் என்று நம்பலாம். எனவே, இந்தக்கட்டத்தில் வீரர்களின்- குறிப்பாக - இந்திய வீரர்களின் பாதுகாப்பு, மற்றும் ரசிகர்கள் மத்தியிலான - இரு நாடுகளின் வீதிகளிலும்- மோதல்கள் என்பன பற்றிய கவனம் பற்றிக் கூடுதலாகச் சிந்திக்க வேண்டியுள்ளது.

இந்தநிலையில், இந்திய கிரிக்கெட்சபை மூன்று உத்தியோகத்தர்களைப் பாதுகாப்புப்பற்றி ஆராய பாகிஸ்தானுக்கு அனுப்பியுள்ளது.

ஆனால், பாகிஸ்தானோ, தாங்கள் இந்திய அணிக்கு மிகுந்த உயர்பாதுகாப்பை வழங்க சகல ஏற்பாடுகளும் செய்துள்ளதாக உறுதி கூறுகிறார்கள். இருந்தாலும், பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படும் பகுதிகளாகக் காணப்படும் கராச்சி மற்றும் பெஷாவரில் ஆட்டங்களில் கலந்துகொள்ள இந்தியத்தரப்பு அவ்வளவு விருப்பம் தெரிவிப்பதாக இல்லை. ஏற்கனவே, கடந்த காலங்களில்கூட வேறு அணிகள் இந்த நகரங்களில் விளையாட மறுத்து, ஆட்டங்கள் பிறிதொரு இடத்துக்கு இடமாற்றப்பட்டிருந்தன. இருந்தாலும் இந்திய கிரிக்கெட்சபை எடுத்தெறிந்து பேசாமல் தமது உத்தியோகத்தர்கள் பாகிஸ்தானில்இருந்து வந்ததும் அதுபற்றிப்பேசலாம் என்கிறார்கள்.

இந்திய கிரிக்கெட் வீரர்கள் சங்கத்தின் செயலாளர் அருண்லால், வீரர்களின் பாதுகாப்புப்பற்றி அச்சமே தெரிவிப்பது உற்சாகமான சமிக்ஞையாகத் தெரியவில்லை. ஆனால், முன்னாள் வீரர் மனிபந்தர் சிங் யதார்த்தமான கருத்துக்களை எடுத்துரைக்கிறார். இவர் இந்திய அணி வீரராக மூன்றுமுறை பாகிஸ்தான் சென்றவர். இவரின் கருத்துப்படி - பாரிய பாதுகாப்புப் பிரச்சினை என்றவகையில் ஏதும் இல்லை. யாரும் பிரச்சினைகளைத் திட்டமிட்டு உருவாக்க நினைப்பதும் இல்லை. மேலும் சிலவார்த்தைப் பிரயோகங்கள் ரசிகர் பக்கம் இருந்து, வீரர் பக்கம் வரலாம். அதெல்லாம் பொருட்டுத்ததக்கதல்ல என்கிறார்.

ஆனால், மைதானப் பதற்றங்கள் என்பது இரு நாடுகளிலும் சகஜம்தான். அதுவும் இந்திய - பாகிஸ்தான் அணிகள் என்றால் சிறிது தூக்கலாகவே இருக்கும். முன்னதாக 1999 இல் கொல்கத்தாவில் ஆசிய டெஸ்ட் சம்பியன் ஷிப் போட்டியொன்றில் குழப்பம் விளைவித்த ரசிகர்கள் காரணமாக எல்லோரும் வெளியேற்றப்பட்டு ஆட்டம் தொடர்ந்தது. இதில் பாகிஸ்தான் வென்றது. பாகிஸ்தான் வெற்றிப்பாதையில் சென்றமையாலேயே குழப்பம் ஆரம்பித்தது என்பது அசிங்கமான செய்தி அதனைத் தொடர்ந்து நடைபெறவிருந்த டெஸ்ட் போட்டிகளின்போது பாகிஸ்தானின் இந்திய வருகையை எதிர்த்து, விஷ்வ இந்து பரிசத் தொண்டர்கள் டெல்லி பெரோசா கோட்லா மைதானத்தின் தடத்தைக் கொத்திச் சேதப்படுத்தினர்.



Five Man Army

1997 இல் பாகிஸ்தானில் கராச்சியில் நடைபெற்ற ஒரு நாள் போட்டிகளின்போது, இந்திய வீரர்கள் தாராளமாகக் கல்லெறி வாங்கினார்கள். இதே மைதானத்தில் 1989, 1990 இல் அணித்தலைவர் சென்றிருந்த கிருஷ்ணமாச்சாரி சிறிகாந்தின் மேலங்கி கிழிக்கப்பட்ட சம்பவமும் நிகழ்ந்தது. இதைவிடப் பாகிஸ்தான் இந்திய ஆட்டத்தில் பாகிஸ்தான் வெல்லவேண்டும் என்று ஆர்வம் காட்டிய இந்திய முஸ்லிம்கள் - இந்தியாவில் தாக்கப்பட்ட சம்பவம் நடைபெற்றது நீண்டகாலத்துக்கு முன்னல்ல.

எனவே, அரசியல் உயர்மட்டங்கள் சம்மதிக்க பின்கூட இப்படியான சம்வங்கள் சகஜமானவையாகவே நோக்கப்பட வேண்டும். மேலும், திட்டமிடப்படாத அந்த நிமிடத்து உணர்ச்சிவசப்பட்டசெயல்கள் பெரிதாக எடுத்துக்கொள்ளப்படக்கூடாது. 2002 இல் மேற்கிந்தியத் தீவுகள் அணியும், அவுஸ்ரேலிய அணியும் முற்றாகவே பாகிஸ்தான் மண்ணில் விளையாட மறுத்திருந்தன. இதனால், வேறுநாட்டு மைதானங்களில் ஒப்புக்கு மாரடிக்கும் நிலையிலேயே ஆட்டங்கள் ஏதோ நிறைவடைந்தன. அத்தோடு தென்னாபிரிக்கா பாகிஸ்தான் வந்தது. ஆனால், பந்தாவோ சினிமாக்காரப் பந்தாக்களைவிட மோசமாக இருந்தது.

இவற்றோடு ஒப்பிடும்போது, இந்தியா அப்படியானதொரு நிலைக்கு இறங்கவில்லையென்றாலும், 'பாதுகாப்பு பாதுகாப்பு' என்று கூச்சலிடுவது சற்று ஓவராகவே இருக்கிறது. மேலாக நாடு திரும்பிய கங்கூலியும்கூட எமக்கு ஏதும ஏற்பட்டால், எமது குடும்பத்தை யார் பார்ப்பது என்று அதீதமான அங்காலாய்க்கிறார். ஆனால், வசீம்அக்ரம் 1998, 1999 தாங்கள் இந்தியா சென்றபோதும், அடிப்படைவாதிகளின் கொலை மிரட்டல்கூட இருந்தது. ஆனால், இந்தியா சென்றபின், அங்கு எமக்குத் கிடைத்த வரவேற்பை மறக்கவேமுடியாது. அது போலவே பாகிஸ்தானில் உங்களுக்கும் அமோக வரவேற்பு இருக்கும். எனவே அச்சம் ஏதும் இல்லாமல் வாருங்கள் என்கிறார் அக்ரம்.

இன்னொரு வாதத்தையும் இறுதியாக முன்வைக்கலாம். 1998,1999 இல் பாகிஸ்தான் அணியின் இந்தியாவுக்கு வந்தார்களே அந்த நன்றிக்கடனை இந்தியக் கிரிக்கெட்சபை தீர்க்கவேண்டாமா? அது இந்தியாவின் கடமையல்வா.

கிரிக்கெட் ஆட்டத்துடன் தொடர்புபடுத்தி பாதுகாப்பு பாதுகாப்பு என்று குரல் எழுப்புவது, இதிலும்கூட பாகிஸ்தானை ஒரங்கட்ட நினைக்கும் ஒரு கிரிக்கெட் அரசியல் செயலாகவே பார்க்கத்தோன்றுகிறது. ஆனால், சர்வதேசக் கிரிக்கெட் ரசிகர்களின் இந்த நிமிட ஆதரவும், அனுதாபமும் பாகிஸ்தானுக்குத்தான்.

**- நிர்மலன் .**

**தேர்தல் பார்வை** - நிதி -

# ஓரணியில் நின்றால் மட்டுமே உரிமையை மீட்கமுடியும்!



யாழ்.குடாநாட்டில் அரசியல் ஆதரவு திரட்டுவோரின் திருவிழாக்கள் ஆரம்பமாகிவிட்டன. எங்கள் ஊருக்கு வாருங்கள், எமது அவலங்களைப் பாருங்கள் என்று எத்தனை கிராமத்து மக்கள் இந்த அரசியல்வாதிகளின் அலுவலகங்களில் மண்டியிட்டார்கள். அதில் எத்தனை தட்டிக்கழிப்புகள் நடைபெற்றன. இன்று நிலைமை மாறிவிட்டது. அம்மையார் பார்த்த அவசர வேலையால் மக்களின் பலம் என்னவென்று இந்த அரசியல்வாதிகளுக்குப் புரிகிறது.

எவ்வாறெனினும் இலங்கையின் ஏனைய பாகங்களுடன் ஒப்பிடுகையில் தமிழர்களின் பிரதேசங்களின் நிலைமை முற்றிலும் வேறுபட்டது. தமிழ்மக்கள் சலுகைகளுக்கு வழிபோனதாக இல்லை. அவர்கள் தமது உரிமைகளையே நோக்காகக் கொண்டுள்ளார்கள். கடந்த காலங்களில் தேர்தலின்போது சைக்கிள் கொடுத்தவர்கள், காசு கொடுத்தவர்கள், குடைகொடுத்தவர்கள் எல்லாம் தோற்றுப்போனதும்- எதுவுமே கொடுக்காத தமிழ்தேசியக் கூட்டமைப்பு வென்றதும் அதற்குச் சான்றாக அமைகிறது. ஆகவே, தேர்தல் காலங்களில் வழமையான கட்சி நாடகங்களையும், வார்த்தை ஜாலங்களையும் தமிழ் மக்கள் நம்பிவிடமாட்டார்கள். அற்ப சொற்ப சலுகைகளை எதிர்பார்க்கவும் மாட்டார்கள். அவர்கள் எதிர்பார்ப்பதெல்லாம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கான விடுதலைப் புலிகளுடனான சமாதான முன்னெடுப்பேயாகும். இதனை வலியுறுத்தவும், சர்வதேசத்திற்கும் தென்னிலங்கைக்கும் தமிழர்களின் பலத்தையும், ஒற்றுமையையும் நிரூபிப்பதற்குமான தேர்தலே இது.

வடக்கு - கிழக்கு உள்ளிட்ட தமிழர் பிரதேசம் எங்கும், தமிழ் கட்சிகள் யாவும் ஓரணியின்கீழ் நின்று போட்டியிட்டு, தமிழர்களின் பலத்தையும், ஒற்றுமையையும் நிரூபிக்கக் கோரும் மக்களின் குரல்கள் ஒலித்துக் கொண்டுள்ளன. இதற்குச் செவிசாய்க்காமல் சுயலாப அரசியல் நோக்குடன் சில சக்திகள் இயங்கிவருவது - தமிழ் மக்களை வேதனைக்குட்படுத்துகின்றது. அது மட்டுமன்றி, அத்தகைய அரசியல் வாதிகளும், கட்சிகளும் நிச்சயமாகத் தமிழ் மக்களால் நிராகரிக்கப்படுவர்.

கால் நூற்றாண்டுகளைத் தாண்டிவிட்ட தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டம்- இன்று சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு, தமிழர்களின் விடுதலை நோக்கியதான முனைப்புக்களுடன் முக்கியமான கட்டத்தை அடைந்து, உலகத் தலைவர்களின் கவனத்தை ஈர்த்துள்ள நிலையில், முன்னெடுக்கப்பட்டுவந்த சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டுப் போயுள்ளன. ஆகவே, அத்தகைய சமாதானப் பேச்சுக்களைத் தொடரவும், அதற்கான அழுத்தங்களை வழங்கவும் ஏற்றவகையான தமிழர்களின் பலமிக்க சக்தி ஒன்று நாடாளுமன்றத்திலும் இன்றியமையாதது அவசியம்.

இன்றைய நாடாளுமன்றப் பலம்- தமிழர்களின் சுயநிர்ணயம், மரபுவழித் தாயகம், தமிழ் தேசியம் என்ற விடயங்களை முன்வைத்து நடக்கவேண்டும் என்பது, தமிழ்மக்களின் வேண்டுகோளாகும். இத்தகைய வேண்டுகோள் இரண்டு வருடங்களாகப் பொங்குதமிழ் என வடக்கிலும் - கிழக்கிலும் வலியுறுத்தப்பட்டது.

தமிழ் மக்களின் வாக்குகள் நல்ல முறையில் பயன்படுத்தப்படவேண்டும். தமிழ் மக்களின் வாக்குரிமைகூடப் பல்வேறு தடைகள்மூலம் மறுக்கப்பட்டு வந்தமையால், கிடைத்திருக்கும் ஜனநாயக உரிமையினைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் பறிக்கப்பட்ட உரிமைகளை, மீட்டெடுப்பதற்கான புனிதப்பணிக்கு தமிழ் அரசியல்வாதிகள் முன்வரவேண்டும். இதற்காகத் தமக்குளுள்ள பேதங்களைக் களையவேண்டும். இல்லாவிடின், அது பேரினவாதப் பேய்களுக்குத் தீனிபோடுவதாகவே அமையும்.

## புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் - பகுதி VII - சிவா

*(நேற்றைய தொடர்ச்சி...)*

இதுவரை நான் இந்தப் பந்தியிலே குறிப்பிட்ட 4 மரணங்களும் - ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த தமிழர்களுடைய அவலவாழ்வின் - மிகச்சிறிய பதிவுகள் மட்டுமே.

பொதுவாக இங்குள்ளவர்களுக்கு - ஐரோப்பிய பணத்தின் அதிகூடிய சந்தைப் பெறுமதிதான் கண்ணுக்குத் தெரிகிறது. அங்குள்ள பொதுமக்களின் அவலங்கள் தெரிவதில்லை.

# தொடரும் அகதிவாழ்வின் அவலங்கள்



ஐரோப்பாவுக்கு அகதிகளாகப் புலம்பெயர்ந்த தமிழர்களின் வரலாற்றை - 1990 இற்கு முந்திய புலப்பெயர்வு, பிந்திய புலப்பெயர்வு என்று இரண்டாகப் பிரிக்க முடியும்.

முந்திய புலப்பெயர்வு 1973-74 காலப் பகுதியில் ஆரம்பமாகிவிட்டது. பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ் ஆகிய நாடுகள்தான் ஆரம்பகட்ட புலப்பெயர்வுகளின் புகலிடமாக இருந்தன. 1983வரை இந்தப் புலப்பெயர்வும் நூற்றுக்கணக்கில்தான் இருந்தது.

1983 இனக்கலவரத்திற்குப் பின்னே இது ஆயிரக்கணக்காக மாறியது.

இந்தக் காலகட்டத்திலேயே நோர்வே, டென்மார்க், இத்தாலி போன்ற நாடுகளும் கதவு திறந்துவிட்டன. இங்கிலாந்தை அல்லது ஐக்கிய இராச்சியத்தைப் பொறுத்தவரை - இலங்கைத் தமிழர்களின் தொழில் ரீதியான குடியேற்றம் 1950 களிலேயே ஆரம்பித்துவிட்டாலும், அகதிகளுக்கான கதவு என்பது பிற்காலதததில்தான் திறந்துவிடப்பட்டது. குடியேற்றவாசிகளாக லண்டன் மற்றும் ஐக்கிய இராட்சியத்துக்குச் சென்ற தமிழர்களுக்கும், அகதிகளாக ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்ற தமிழர்களுக்கும் இடையில் பாரிய வேறுபாடு இருந்தது.

குடியேற்றவாசிகளாக லண்டனுக்கு அல்லது ஐக்கிய இராட்சியத்தின் ஏனைய பகுதிகளுக்குச் சென்ற தமிழர்கள் ஆங்கில கல்வி கற்றவர்கள் என்பதால், மொழி ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை. ஒரு வேலையின் பொருட்டு - அல்லது உயர்கல்வியின் பொருட்டு அவர்கள் அங்கு சென்றதால் - பணம், தங்குமிடம், சாப்பாடு என்று எதுவுமே ஒரு பெரிய பிரச்சினையாக இல்லை இத்தகைய குடியேற்றவாசிகள் அநேகமாக வசதிபடைத் ...ாகவே இருந்தார்கள். முக்கிய ...வேகள் சட்டரீதியில் அனுமதி ...ந்தான் ஐக்கிய இராச்சியத்துக் ...டியேறியிருந்தது குறிப்பிடத்தக் ...லுனால், அகதிகளாக ஏனைய ...ய நாடுகளுக்குச் சென்றவர்களது ... என்பது முற்றிலும் வித்தியாச... ழி - காலநிலை - தங்குமிடம், ... - தொழில் முக்கியமாக 'இருப்பு' எல்லாமே பெரும் பிரச்சினையாக ... ல் கட்டாமாக ஐரோப்பிய நாடு ...ப் புலம்பெயர்ந்த தமிழர்களில் நூற்றுக்கு 99 வீதமானவர்கள் - யாழ்ப்பாணக் குடாநாட்டின் நடுத்தர மற்றும் வறுமை கோட்டு மட்டத்திலுள்ளவர்களே இருந்தார்கள்.

இவர்களில் பெரும்பாலானவர்கள் தங்களது உடமைகளை விற்று அல்லது ஈடுவைத்துத்தான் அங்கே சென்றிருந்தார்கள்.

இவர்கள் அந்த நாடுகளில் கால் வைத்தவுடன் எதிர்நோக்கிய முதல் பிரச்சினை மொழியாகும். இவர்களில் எவருக்குமே இவர்கள் சென்று இறங்கிய நாட்டின் மொழியில் ஒரு சொல்லுக்கூடத் தெரியாது.

ஒருவர் ஒரு நாட்டில் அரசியல் தஞ்சம்கோரவேண்டுமானால், தன்னுடைய தாய் நாட்டில் ஏன் இருக்கமுடியாது என்பதை தெரிவிக்கவேண்டும். மொழி தெரியாத காரணத்தால் - இவர்களால் அதை தெரிவிக்கமுடியாமல் போக, குடிவரவு சட்ட விதிகளைமீறி நாட்டுக்குள் சட்ட விரோதமாக நுழைந்த குற்றத்திற்காக இவர்களில் அநேகம்பேர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலய உறுப்பினர்களின் உதவியால் விடுதலையாகி வெளியே வந்தவுடன், அகதி முகாம் வாழ்க்கையே இவர்களுக்குக் காத்திருந்தது. குடாநாட்டில் வேலிக்குச் சண்டை பிடிக்கும் பழக்கமுடைய - கூட்டு வாழ்க்கை, கூட்டுச் செயற்பாடு என்பவற்றுக்குப் பழக்கப்படாத இவர்களால்- அகதி முகாம் வாழ்க்கையை ஏற்றுக்கொள்வது என்பது அவ்வளவு சுலபமான விடயமாக இருக்கவில்லை.

சாதிய சமூகமாக வாழ்ந்து பழக்கப்பட்ட நம்மவர்களால் - அகதி முகாம்களில் ஆபிரிக்க கறுப்பினத்தவர்களுடன் சேர்ந்து வாழ்வது என்பது மிகப்பெரிய தண்டனையாக இருந்தது.

பிரான்சிலுள்ள ஒரு அகதிமுகாமில்- பெரும்பான்மையானவர்களாக ஆபிரிக்க கறுப்பினத்தவரே இருப்பார்கள். அடுத்தபடியாக அரபு இனத்தவர்கள் இருப்பார்கள். சுவிசிலுள்ள ஒரு அகதி முகாமில் கிழக்கு ஐரோப்பிய இனத்தவர்கள் அதிக அளவிலும், அடுத்தபடியாக ஆபிரிக்க கறுப்பினத்தவர்களும் இருப்பார்கள்.

ஜேர்மனியைப் பொறுத்தவரை குர்திஷ் இனத்தவர்கள் அதிகளவிலும், கிழக்கு ஐரோப்பிய இனத்தவர்கள் அடுத்தபடியாகவும் இருப்பார்கள். அங்கு ஆபிரிக்கக் கறுப்பினத்தவர்கள் என்பது மிகக்குறைவு.

நம்மவர்களைப் பொறுத்தவரையில் ஆபிரிக்கக் கறுப்பினத்தவர்கள் என்றால் ஊத்தையர்கள், கூடாதவர்கள், அருவருக்கத்தக்கவர்கள் என்ற மனப்பான்மையே பெரியளவுக்கு இருந்தது.

பாரிசிலுள்ள பல அகதிமுகாம்களில்- ஆபிரிக்கர்களுடன் தங்களை ஒன்றாக விடவேண்டாம் என்று நம்மவர்கள் விடுத்த வேண்டுகோள் இன்னமும் பதிவில் இருக்கின்றன.

நம்மவர்கள் எப்போதும் வெள்ளைத் தோல் உடைய கிழக்கு ஐரோப்பிய அகதிகளுடனும் - அரபுக்காரர்களுடனும் கூட்டு வைத்துக் கொள்வதையே விரும்பினார்கள்.

ஆனால், நம்மவர்களுக்கு கறுப்பினத்தவர்களைப் பற்றிய பார்வை எப்படி இருந்ததோ, அதே பார்வைதான் வெள்ளை அகதிகளுக்கு நம்மவர்களைப் பற்றி இருந்தது. அவர்களுக்கு எல்லோருமே, கறுப்பர்கள்தான். ஐரோப்பிய மக்களின் அகதிகளாக இடம்பெயர்ந்தவர்களிடத்திலேயே (கிழக்கு ஐரோப்பிய நாட்டவர்கள்+ அரபுக்கள்).

அதிகளவுக்கு நிறவெறியும், இனவாதமும் இருந்தது குறிப்பிடவேண்டிய ஒன்று. மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி சாப்பிடாத சோற்றுப் பிரியர்களான நம்மவர்களுக்குரிய அடுத்த பிரச்சினை உணவாகும்.

ஐரோப்பாவிலிருக்கும் அகதிமுகாம்களில் மாட்டிறைச்சியும், பன்றி இறைச்சியும், உருளைக்கிழங்குக் கறியும், பாணுமே பிரதான உணவுகளாக இருந்தன.

சோறு என்பது வாரத்தில் ஒரு முறை கறிக்குத் தொட்டுக்கொள்ள உபபொருளாகவே வழங்கப்பட்டது. (தொடரும்)

## பார்வைகள் பதிவுகள் பகிர்வுகள்

தமிழ் பெயரைப் பிள்ளைகளுக்குச் சூட்டுவதைப் பரிசுகொடுத்து ஊக்குவிக்கவேண்டியநிலையில் தமிழ் சமுதாயமுள்ள பரிதாபம் பற்றி கொஞ்சம் யோசிக்கவேண்டியுள்ளது. தமிழ்ப் பெயரை பிள்ளைகளுக்குச் சூட்டியவர்களுக்கு கனடாவின 'சிலம்பம்' அமைப்பு அண்மையில் யாழ்ப்பாணத்தில் பரிசுகளை வழங்கியது.

ஒரு மொழியின் தனித்தன்மை அம்மொழியில் உள்ளவர்களின் பெயர்களில் தங்கியுள்ளது. இந்தப் பெயர்களே அவர்களை இன அடையாளம் காட்டுகின்றது. தமிழில் பெயர்களை சூட்டுவதற்கு வெட்கப்பட வேணடியதில்லை. வாய்க்குள் நுழையாத ஆங்கில எழுத்துக்களின் சேர்க்கையிலான பெயர்களை வைப்பதை விடவா இதற்கு வெட்கப்படவேண்டியுள்ளது. மிகவும் நாகரிகமான தமிழ் பெயர்கள் உள்ளன. இப்பெயர்களைக்கொண்ட இரண்டு நூல்கள் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன. அதில் அதிநாகரிக தமிழ் பெயர்களைக் காணலாம்.

தமிழனை அடையாளம் காண்பது அவனின் பெயரைக் கொண்டேயாகும். இதில் சமுதாயம் அக்கறைகாட்ட வேண்டும். இதில் யூதர்கள் உலகளவில் அதிதீவிரம் காட்டுகின்றனர். பைபிளின் பழைய ஏற்பாட்டுக் காலப் பெயர்களையே யூதர்கள் தம பெயர்களாகக கொண்டுள்ளனர். இதேபோல் பிரிடடன் தவிர்ந்த ஏனைய ஐரோப்பிய, கிழக்காசிய, மத்திய ஆசியா, ஆபிரிக்கா, தென்அமெரிக்க நாடுகளிலும் உள்ளது. ஆனால் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இல்லை.

வெளியார் - வெளிமதங்களின் ஆதிக்கங்களால் அவற்றில் தமது பெயர்களை நம்மவர்கள் இழந்து விடடனர். புதிதாக வந்த எண் சோதடம் தமிழ்ப்பெயர்களை இன்னமும் சிதைத்துவிட்டது. எண்சோதிடத்தில் சொல்லும் இலககங்களுக்கு நல்ல தமிழ்ப் பெயர்களையும் சூட்டலாம். அந்தத் தமிழ்ப் பெயரை ஆங்கிலத்திலும் எழுதி கூட்டிக் குறைத்துக் கொளளலாம். வெள்ளையர்கள் நாய்க்குட்டிகளுக்கும், பூனைக்குட்டிகளுக்கும் வைக்கும் பெயர்களை- நாம் எமது பிள்ளைகளுக்குச் சூட்டி, எம் அடிப்படை இன அடையாளத்தை அழிக்கக்கூடாது.

மத அடையாளத்துள் மறைந்துவிட்ட தமிழ்ப் பெயர்களை நாம் மீட்பது பற்றி யோசிக்கவேண்டும். கிறஸ்தவ மதத்தில் விவிலியப் பெயர்களை பிள்ளைகளுக்குச் சூட்டுகின்றனர். இது தவிர்க்கமுடியாதது. ஆனால், இந்த கிறிஸ்தவப் பெயர்களுடன் இன அடையாளத்துக்காக ஒரு சிறிய தமிழ்ப் பெயரையாவது சூட்டமுயலலாம். கிறஸ்தவர்களிடம் இரட்டைப் பெயர்களை இணைக்கும் முறை இருப்பதால், இதனையும் அவர்கள் சாத்தியப்படுத்தலாம். இது பற்றி கிறிஸ்தவ மதத்தவர்கள் யோசிக்கலாம். ஏனெனில், யோசப் யூதராகவும், நீக்ரோவாகவும், தமிழனாகவும், ஆங்கிலேயராகவும், மொங்கோலியராகவும் இருக்கிறார. அந்த யோசப் எந்த இனத்தவர என்று அறிய தமிழ் யோசப்பிற்கு ஒரு தமிழ்ப் பெயரையும் இணைத்தால், இன அடையாளத்தை சுட்டுவதாக அது அமையும். சில கிறிஸ்தவர்கள் இதனை செய்தும் உள்ளனர். அதனையும்விட எல்லாத் தமிழரும் தம் இன அடையாளத்தை நடை, உடை பாவனையில் இல்லாவிட்டாலும் பெயர்களிலாவது தக்கவைக்கவேண்டும். இதனை ஒரு பெரிய புரட்சி என எவரும் கருதவேண்டாம். ஒரு சிறிய மாற்றம் அவ்வளவே.'

'நல்ல தமிழ்ப் பெயரை பிள்ளைக்குச் சூட்டுங்கள். நாமோர் தமிழர் என்று அடையாளம் காட்டுங்கள்!' என்று தமிழகப் பாடகர் புஸ்பவனம் குப்புசாமியின் ஒரு கிராமியப்பாடலும் உள்ளது.

திரு.த.திரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை*
*மிகல்காணும் கேடு தரற்கு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## சிதையும் சர்வதேச நம்பிக்கைகள்

இன்றைய அரசியல் நெருக்கடிகளுக்கும், குழப்பத்திற்கும் காரணமான அதன் இரட்டை ஆட்சி நிர்வாக முறையின் முரண்பாடுகளும், அதிகார மோதல்களும், இலங்கை தொடர்பான சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்புகளையும், நம்பிக்கைகளையும் பெருமளவில் சிதைத்துள்ளதாகவும், இதன் காரணமாக இலங்கைக்கான சர்வதேச உதவிகள் மட்டுப்படுத்தப்பட்டு குறைக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

பலதசாப்த காலயுத்தம் காரணமாக சீரழிந்து போயிருந்த இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது, ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு பதவியேற்றதைத் தொடர்ந்து ஏற்பட்ட போர்நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தம் காரணமாக உருவான சமாதான சூழ்நிலைமையால் ஒரு முன்னேற்றகரமான நிலைமாறத் தொடங்கியது என்பதை யாவரும் அறிவர்.

வெளிநாட்டு முதலீடுகள், சர்வதேச கடனுதவிகள் போன்றவை சமாதான நகர்வுகள் ஏற்படுத்திய நம்பிக்கை காரணமாக அதிகரிக்கத் தொடங்கியுள்ளமையானது, பொருளாதார வளர்ச்சி வீதமும் அதிகரிக்கக் காரணமாகியது.

உண்மையில், என்றுமில்லாத அளவுக்கு கடந்த வருடம் ஜூன் மாதத்தில் ரோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவிசெய்யும் நாடுகளின் உச்சி மாநாட்டில் - 450 கோடி டொலர்களை வழங்க உறுதியளித்தமையானது, சமாதானத்தை வலியுறுத்தி அதன் முன்னேற்றகரமான நகர்வை நிபந்தனையாக்கி மேற்கொள்ளப்பட்ட ஒன்றேயாகும். இது ரணிலின் அரசுக்குக் கிடைத்த பெரும் வெற்றியாகவும் புகழப்பட்டது. அத்துடன், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இது அதிர்ச்சியை ஏற்படுத்தும் ஒன்றாகவும் அமைந்தது.

போருக்காக சகல வளங்களையும் அள்ளித் தெளிததும், வரலாறுகாணாத் தோல்வியையே பரிசாகப் பெற்ற சந்திரிகா, வெறுமையான திறைசேரி ஒன்றையே, ரணில் அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது அவருக்கென விட்டுச் சென்றார்.

நிதிவளமற்ற நிலையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ரணிலுக்கு ஒரேயொரு ஆறுதலைத் தரும் விடயமாகவிருந்தது - விடுதலைப் புலிகள் அறிவித்திருந்த ஒருதலைப் பட்ச போர்நிறுத்தமேயாகும்.

இந்த யுத்த நிறுத்தத்தின் அடிப்படையிலான இலங்கையின் கடந்த இரண்டாண்டு கால சமாதானச் சூழலும் அதனையொட்டிய பொருளாதார வளர்ச்சிச் சூழலும் தான். 'ஓடேந்தி நிற்கும' பிச்சைக்கார அவலநிலைக்குச் சந்திரிகா தள்ளிவிட்ட இலங்கையை சற்று நிமிர வைத்தது என்றால் மிகையில்லை.

போரில் வெற்றிப் பெருமிதத்தில் இருந்த விடுதலைப் புலிகளின் சமாதானம் மீதான, அமைதி மீதான பற்றுறுதியும், போர்நிறுத்தத்தினை உறுதியாக கடைப்பிடித்த நேர்மையும், பல்வேறு பொறுமையைச் சோதிக்கும் - ஜனாதிபதி மற்றும் அவரின் கீழான பாதுகாப்புப் படையினர் ஆகியோரின் செயற்பாடுகளுக்கு மத்தியிலும், அமைதிகாத்து நின்ற தன்மையுமே இலங்கையை அபிவிருத்தி மற்றும் பொருளாதார முன்னெடுப்புகளில் நம்பிக்கையுடன் இயங்கவைத்ததெனலாம்.

ஆனால், இவையனைத்தும் தற்போது கேள்விக்குறியாகும் நிலை ஏற்பட்டுள்ளமைக்கு ஜனாதிபதியின் சமாதான - அமைதி - மற்றும் ஜனநாயக விரோத செயற்பாடுகளே காரணமாகும். அவரின் அதிகார அகங்காரத்துடன் கூடிய தொலைநோக்குச் சிந்தனையற்ற, தேசிய நலனை கருத்திற் கொள்ளாத, சுயநலத்தன்மையைக் கொண்ட, அரசியல் நகர்வுகள் காரணமாக ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்கள், இலங்கை குறித்த சர்வதேச நம்பிக்கைகளில் பெருமளவு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதன் வெளிப்பாடாகவே அண்மையில் யு.எஸ்.எயிட் எனப்படும் (USAID) சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனத்தின் ஆசியாவுக்கான பிரதி உதவி நிர்வாகியான மார்க், வோட் கூறிய கருத்துக்களைக் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கான - பொருளாதார வளர்ச்சி மற்றும் சமாதான முன்னெடுப்புகளுக்கான - ஆதரவை வழங்கும்நோக்குடனான அமெரிக்க நிறுவனத்தின் செயற்திட்டங்கள் தொடர்பான விடயங்கள் குறித்து கலந்துரையாட, விஜயம் ஒன்றை மேற்கொண்டு வந்த அவர், இலங்கையில் பேச்சுவார்த்தை மூலமான சமாதானத்தை எட்ட, தொடர்ச்சியான சர்வதேச ஆதரவு அவசியமென அமெரிக்கா நம்புவதாகவும், ஆனால் அரசியல் ஸ்திரத்தன்மை இங்கு இல்லாததால், இந்த ஆதரவும், உதவிகளும் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் எச்சரித்துள்ளார்.

சர்வதேச நாடுகளின் உதவி, ஆதரவின்றி சுயாதீனமாகத் தன்னைக் கட்டியெழுப்பும் திராணி - இலங்கைக்குக் கிடையாது. அப்படியானதொரு உன்னதநிலையைத் தனித்தியங்கும் ஆற்றலை - இலங்கையின் பேரினவாத சிந்தனைகொண்ட அரசியல் தலைமைகள் கொண்டிருக்கவும் இல்லை. ஜனநாயகத்தை சர்வாதிகாரமாக மாற்றி, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை இறுகப் பற்றியுள்ள சந்திரிகாவின் அணுகுமுறைகள் - சர்வதேச சமூகத்தின் அதிருப்தியைச் சந்தித்துவரும் இந்தச்சமயத்தில, மார்க். வோட் கூறியுள்ள கருத்துக்கள் - இலங்கை குறித்த நம்பிக்கைகள் சர்வதேச மட்டத்தில் சிதைந்து வருவதையே காட்டுவதாகவுள்ளது.

ஆனால், இது குறித்து இலங்கையின் ஆட்சி அதிகார பீடத்தவர்கள் அக்கறைகொள்பவர்களாகத் தெரியவில்லை. இது இந்த நாட்டின் சமாதானம் குறித்து, அவர்கள் பொறுப்புடன் சிந்திப்பவர்களாக இல்லை என்பதையும் உணர்த்தவே செய்கிறது.

# நாடும் நடப்பும்




# தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து அரசாங்கத்தை அமைக்கக்கூடாது

## சிஹல உறுமய கோரிக்கை

ஜனாதிபதியோ, பிரதமரோ எந்தவிதக் காரணங்களுக்காகவும், தமிழ்க்கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைக்கக்கூடாது.

இவ்வாறு சிஹல உறுமய - ஜனாதிபதியையும், பிரதமரையும் கேட்டுக்கொண்டுள்ளது.

பொதுத் தேர்தல்கள் நடைபெற்று முடிவடைந்த பின்னர் எந்த ஒரு காரணத்திற்காகவும், தமிழ்க் கட்சிகளுடன் கூட்டமைத்து ஆட்சி நடத்தக்கூடாது.

சிங்கள அரசுகள் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுவதன்மூலம், எதிர்காலத்தில் தமிழீழத்திற்கே அது வழிவகுக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்திற்குள் வருமாக இருந்தால், கூட்டமைப்பின் ஊடாக விடுதலைப் புலிகள் முழுமையான ஆக்கிரமிப்பை மேற்கொள்ள முயல்வார்கள். எனவே, அவ்வாறான செயற்பாடுகள்மூலம் விடுதலைப் புலிகள் கோருகின்ற தமிழீழம் - விடுதலைப் புலிகளிடம் தானாகவே சென்றுவிட வாய்ப்புண்டாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

சிங்களக் கட்சிகளுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று சிஹல உறுமய - ஜனாதிபதியையும், பிரதமரையும் கேட்டுக்கொண்டுள்ளது. சிங்கள மக்களின் குரல்களை நாடாளுமன்றில் ஒலிக்கச் செய்வதற்காகவே, சிஹல உறுமய தேர்தலில் போட்டியிடுவதாகவும் அது கூறியுள்ளது.

தமிழ்க் கூட்டமைப்புடன் சேர்ந்து ஆட்சியமைப்பதனால், சிங்கள மக்களுக்குத் துரோகம் இழைக்கும் நடவடிக்கைகளில் ஜனாதிபதியும், பிரதமரும் ஈடுபடக்கூடாது எனவும் சிஹல உறுமய மேலும் தெரிவித்தது. (01)

# இரணைமடு நீர்த்தேக்கத்திலிருந்து தீவகத்திற்கு நன்னீர் வழங்கும் திட்டம்

இரணைமடு, நீர்த்தேக்கத்திலிருந்து தீவகத்திற்கு நன்னீர் வழங்கும் திட்டம் ஒன்று ஆய்வு செய்யப்பட்டுள்ளதாக ஊர்காவற்துறை பிரதேசசெயலர் எஸ்.செல்வநாயகம் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையினால் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினால், தீவகத்தில் பாரிய சவாலாகவுள்ள நன்னீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யமுடியும் எனவும் தெரிவித்தார். (111)

# யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழா

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் 2003 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பரிசளிப்பு விழா - இன்று காலை 9.00 மணிக்குப் பாடசாலை முத்துக்குமாரு அரங்கில் - அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதில், தரம் 1 தொடக்கம் 5 வரைக்குமான வகுப்புக்களில் தவணைப் பரீட்சைகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கலுடன், கடந்த வருடம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 108 மாணவர்களுக்கும் வெள்ளிப் பதக்கம் வழங்கப்படவுள்ளதுடன், கூடிய புள்ளிகள் பெற்ற முதல் 15 மாணவர்களுக்குச் சிறப்புப் பரிசாகத் தங்கப் பதக்கமும் அணிவிக்கப்படவுள்ளதுடன், பெற்றோர்களால் ஆசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (113)

# அஞ்சல்மூல வாக்காளரை தொடர்புகொள்ளக் கோரிக்கை

யாழ்.மாவட்டத்தில் அஞ்சல்மூலம் வாக்களிக்கவுள்ளோரை தொடர்புகொள்ளுமாறு யாழ்.செயலகத்தில் இயங்கும் தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இம்முறை நடைபெறவுள்ள தேர்தலில் - தபால்மூலம் வாக்களிக்கத் தகுதி உடையோரின் வாக்காளர் டாப்பு மற்றும் பெயர்விபரங்கள் - அந்தந்த உள்ளூராட்சி திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அவர்கள் தமது பெயர்விபரங்களைத் தமது பிரதேச செயலகங்களிலோ அல்லது யாழ்.செயலகத்திலோ பார்வையிடமுடியும் எனவும் தெரிவித்தார்.

எதிர்வரும் 16 ஆம் திகதிமுதல் 23 ஆம் திகதிவரை இந்த அஞ்சல்மூல வாக்காளர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட இருப்பதனால், குறிப்பிட்ட காலத்துள் தமது பெயர் விபரங்களை அனுப்பிவைக்குமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# மக்கள் முன்னணி ஆட்சிக்கு வந்தால் அடுத்த பிரதமர் பதவி எனக்கே!

## அமைச்சர் டி.என் ஜயரத்ன கூறுகிறார்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வருமாக இருந்தால், தானே எதிர்காலத்தில் பிரதம மந்திரி பதவியை வகிப்பேன் எனப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும், அஞ்சல்துறை அமைச்சருமான டி.என். ஜயரத்ன தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின், முக்கிய உறுப்பினர்கள் கேட் டுக்கொண்டதற்கு இணங்கவே, தான் தொடர்ந்தும் அந்தக் கட்சியில் இருப்பதாகவும், இதனை உணர்ந்து ஜனாதிபதி தனக்குப் பிரதமர் பதவியைத் தருவார் என்றும் ஜயரத்ன கூறினார்.

1951 ஆம் ஆண்டிலிருந்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்த ரட்ணசிறி விக்கிரம நாயக்காவுக்கு ஏற்கனவே பிரதமர் பதவி வழங்கப்பட்டதனால், அவரோடு கட்சியில் இணைந்து பணியாற்றிய வகையில் தொடர்ந்தும், கட்சியில் அங்கம் வகிக்கும் தனக்கே - பிரதமர் பதவி கிடைக்கவேண்டும் எனவும் ஜயரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகம் ஒன்றிற்கு அளித்த பேட்டியிலேயே இந்தக் கருத்துக்களை அவர் கூறினார். (எ)

தேர்தல் கோலங்கள்

# நாடாளுமன்ற தேர்தல் குறித்து மக்கள் என்ன கருதுகிறார்கள்

## தேர்தல் மாறுதலைத் தருமா? தமிழருக்கு ஆறுதலைத் தருமா?

**ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்தமையயிட்டு, பொதுத்தேர்தல ஒன்று நடைபெறவுள்ளது. பொதுமக்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பது தொடர்பாகக் கருத்துக்களைக் கேட்டறிந்தோம். அவர்களின் கருத்துக்கள் இங்கே பிரசுரமாகின்றன.**

**சரவணையைச் சேர்ந்தவரும், சின்னமடு றோமன் கத்தோலிக்க பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியருமான ப.இராஜேஸ்வரன் என்பவரிடம் தேர்தல் வருகின்றதே, என்ன நினைக்கிறீர்கள் எனக் கேட்டதும் -**



'என்னைப் பொறுத்தவரையில் இந்தத் தேர்தல் சமாதானத்திற்குப் பெரும் இடையூறாகத்தான் இருக்கும்.

தேர்தலுக்குப் பிறகு நிரந்தர சமாதானம் ஒன்று ஏற்படுமா என்ற கேள்வி எழவே செய்கிறது.

இனத்துவ அடிப்படையில் இலங்கையிலுள்ள எல்லாத் தமிழ்க்கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து, தேர்தலில் போட்டியிட்டு, வெற்றிபெற்றால்- தமிழர்களுக்கான ஒரு தனியான சக்தியை அடுத்த நாடாளுமன்றத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பது எனது அபிபபிராயம்.

சமாதானத்தினை விரும்புகின்ற மக்கள் கூடியளவிற்கு U.N.P. அரசாங்கத்தின் மீதுதான் நம்பிக்கை வைத்துள்ளதாகத் தெரிகிறது.

ஓரளவு நிம்மதியான பலனைக் கடந்த இரண்டு வருடகால நாடாளுமன்ற ஆட்சி எங்களுக்குத் தந்திருக்கின்றது. இதனை முன்னெடுத்து நடத்துவதற்கு ரணில் அரசிற்குக் கூடியளவு பலம் இல்லை என்பது யாவரும் அறிந்த உண்மை.

கூடியளவு பலத்தினை மக்கள் வழங்கவேண்டும். தேர்தலால் வடக்கு - கிழகிற்கான அபிவிருத்தியும், மக்களின் வாழ்க்கையில் பொருளாதாரமும் பின்னுக்குத்தள்ளப்படுகின்றது.

இருபது வருட அரசியல் வாழ்க்கையில் தற்போது ரணில் அரசு வந்ததிலிருந்து ஓரளவு அமைதியான சூழலை மக்கள் அனுபவித்து வருகிறார்கள்'.

'சந்திரிகாவின் அரசு தேர்தலில் வெற்றி பெறுவதற்கு ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்ததனால், கூடியளவு வாய்ப்பு இருக்கிறது. சந்திரிகா அரசு வந்தால், மறுபடியும் யுத்தம் வருமா? சொல்லத்தெரியவில்லை.

ஆனால், விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் யார் வந்தாலும் பேச்சுவார்த்தையில் தொடர்ந்தும் ஈடுபடுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஜே.வி.பியினர் கூடியளவு இந்த சமாதானத்தினைக் குழப்பத்தான் செய்வார்கள்'.

**இராமநாதன் நுண்கலைப்பீட மூன்றாம்வருட மாணவன் இராசையா தர்மேந்திரா தேர்தலைப் பற்றிக் கூறும்போது...**



'தேர்தல் முடிவில் வரப்போகிற அரசாங்கம் சிங்கள அரசாங்கம். அதிலே எந்தவித மாற்றமும் இல்லை. வரப்போகின்ற அரசாங்கம் எந்தளவிற்குத் தமிழ் மக்களுக்கு நல்லதைச் செய்யப்போகின்றது என்று சொல்லமுடியாது.

முன்னர் வந்த அரசாங்கங்கள் தேர்தலின்போது, அதைச்செய்வோம், இதைச்செய்வோம் என்று சொல்லித்தான் வந்தார்கள். பின்பு வந்தவுடன் ஒன்றுமே தமிழ்மக்களுக்குச் செய்வதில்லை'.

'சந்திரிகா அரசாங்கம் வந்தால், அது சமாதானத்தினைக் கொண்டு வரும் என்பது நிச்சயமில்லை. ஏனென்றால் - ஜே.வி.பியினருடன் கூட்டுச்சேர்ந்ததினால், அவர்களுடைய கதைக்கு ஏற்றவகையில்தான் மாறப்போகின்றா என்பதுதான் உண்மையாகும்'.

'தமிழ் கட்சிகள் ஒன்றாகச் சேர்ந்து, ஒரேசின்னத்தின்கீழ் தமிழர்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் தேர்தலில் நின்றால்-கூடுதலான வாக்குகளைப்பெற்று, தமிழர்களுக்கான பிரச்சினையில் தீர்வு ஒன்றினைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு அதிகமா



கலாம்'.

**இரும்புத் தொழிலாளியான தர்மலிங்கம் என்பவரின் தேர்தல் தொடர்பான கருத்துக்கள் -**

அன்றிலிருந்து இன்றுவரை ஒரேமாதிரித்தான் வேலை செய்து வருகின்றேன். இதுவரை எந்தவித மாற்றமும் இல்லை. இந்த தேர்தலிலும் எந்தவித மாற்றமும் ஏற்படப் போவதில்லை.

ரணில் அரசானது கடந்த இரண்டு வருடங்களில் தமிழ் மக்களுக்குப் பெரிதாக ஒன்றுமே செய்யவில்லை. மறுபடியும் ரணில் அரசானது வந்தால், தமிழ் மக்களுக்கு உதவி செய்வார் என்று எப்படி எதிர்பார்ப்பது? தேர்தலைப் பற்றி என்ன சொல்வது.

தேர்தல் போகும் - வரும். ஆனால், எல்லாவற்றிலும் துன்பம் அனுபவிச்சுக் கொண்டுதான் இருக்கிறோம். நான் ஜீ.ஜீ.பொன்னம்பலம் காலத்தில் இருந்தே காங்கிரஸ் கட்சிக்கு வோட்டுப்போட்டுக் கொண்டு வந்தனான். இன்று ரணில் அரசு ஏதோ ஒரு அளவிலே போய்க் கொண்டுதான் இருக்கிறது. இந்தத் தேர்தலில் யாரைத்தெரிவு செய்வது என்பது அந்தந்தநேர சூழலைப்



பொறுத்தது'.

*பெயர் சொல்லவிரும்பாத வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட வியாபாரி ஒருவரின் கருத்துக்கள்.*

தேர்தலில் பெரும்பாலும் ரணில் அரசாங்கம் வந்தால், ஓரளவுக்கு நன்மையாக இருக்கும். சந்திரிகா அரசாங்கம் வந்தால், நன்மை ஏற்படப் போவதில்லை. ரணில் அரசாங்கம் வந்தால்... அவரும் சிங்களக்கட்சி தான். ஆகவே, எங்களுக்கு நன்மை என்று ஒன்றுமில்லை. உதவி செய்யவேண்டும் என்பதற்காக ஏதாவது சலுகைகள் செய்வார்.

எனக்கு வோட்டு இல்லை. ஆனால், ஒன்று... யாருக்கு வோட்டுப் போட்டு என்ன பயன். நடப்பதைப் பார்த்துக்கொண்டு இருக்க வேண்டியதுதான். சந்திரிகா அரசாங்கம் வந்தால், மறுபடியும் யுத்தம் ஏற்படும் என்று சொல்லமுடியாது. தமிழர்களுக்கான எந்தத் தீர்வு என்றாலும், இந்தா அந்தா என்று இழுபட்டுக்கொண்டேபோகும். அவ்வளவுதான் சொல்லமுடியும்'.

**யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும், தையல் தொழிலில் ஈடுபட்டு வருபவருமான ரீ.விஜயகுமார் - தேர்தல் தொடர்பான கருத்துக்களைக் கூறுகிறார்.**

'தமிழர்களுக்கு ஒரு நிரந்தரமான தீர்வு கிடைக்கவில்லை. பிறகு எதற்குத் தேர்தல்? தமிழர்களுக்கான ஒரு கட்சி என எதையும் சொல்லமுடியாத நிலையேயுள்ளது. நாங்கள் நினைக்கின்றது நடக்காது. போனமுறை தேர்தல் எல்லாம் நாங்கள் நினைத்ததில் நூற்றுக்கு 25 வீதமாவது நிறைவேறவில்லை'.

'அதேமாதிரி இந்தத் தேர்தலும் எண்மாதிரி என்று சொல்ல முடியாது உள்ளது. தேர்தலில் நாங்கள் எதிர்பார்ப்பது ஏதோ... நடக்கிறது வேறு ஏதோ... தேர்தலில் தமிழ்க் கட்சிகள் ஒன்றாக நின்று தமிழ் மக்களுக்கு நல்லது செய்யமுன் வரவேண்டும்'.

சந்திரிகா அரசாங்கம் ஆனது எங்களுக்கு ஒன்றும் செய்யாது, உபத்திரத்தைத்தான் செய்யும். ரணிலையும் சொல்லமுடியாது. என்னென்ன நிலைப்பாட்டிலே இருக்கின்றார் என்று சொல்லவும் தெரியாது. தமிழ் மக்களுக்குப் பயன் பெறாத இந்தத்தேர்தல் எதற்கு? எங்களுக்குத் தேவையில்லை.

தமிழ் மக்களைப் பேக்காட்டிக் கொண்டு இருக்கிறார்கள். உண்மையான தேர்தல் நடக்குமாயின், எங்களுக்கு வெற்றிதான்...அது நடக்குமா?'

**றக்கா வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வசித்துவரும் து.யோகரட்ணம் என்பவரிடம் தேர்தல் வரப் போகின்றது என்றதும் - தனது ஆதங்கத்தைத் தெரிவித்தார்.**

'தேர்தல் என்று பல கோடி செலவுசெய்து பொருளாதார மட்டத்தில் இலங்கையைப் பின்னுக்குக் கொண்



டுபோவதை நான் விரும்பவில்லை. சமாதானம் ஏற்பட்டு, விடுதலைப் புலிகளுக்கும் இராணு வத்திற்கும் இடையே பேச்சு வார்த்தை நடந்துவரும் வேளையில் - இந்தத் தேர்தலானது அதைக் குழப்பும் நிலையில்தான் உள்ளது'.

'சந்திரிகா அரசானது நர்டாளுமன்றத்தினைக் கலைத்துத் தேர்தலைக் கொண்டுவருகிறது என்றால், தன்னால்தான் எந்தக் காரியமும் நடத்தப்படவேண்டும் என்ற காரணத்தினால்தான். அதிகாரத்திமிரில் அதிரடி முடிவுகளை எடுகின்றா.'

ஜே.வி.பி. கட்சியானது சந்திரிகாவுடன் சேர்ந்திருந்தாலும், எனது எதிர்பார்ப்பு ஐக்கிய தேசியக் கட்சி வரும் என்பதுதான். உலக நாடுகளுக்குப் பதில் சொல்லவேண்டும். ஆனபடியால், சந்திரிகா அரசாங்கம் வந்தாலும், யுத்தத்தை மறுபடியும் தொடங்குவது என்பது ஆகாத காரியம்'.

**நேர்காணல் - பூ.நகுலன், செல்வா**

# தனியார் கல்வி நிறுவனங்களின் நடைமுறைகள் மீள்புனரமைப்பு

யாழ்ப்பாணம், நல்லூர் தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியமானது - தனியார் நிறுவனங்களின் நடைமுறைகளை மீளப் புனரமைத்துள்ளதுடன், மாணவர்களுக்குத் தேவையான பல நடைமுறைகளையும் சேர்தது 2004 ஆம் ஆண்டு நடைமுறைகளை அறிவித்துள்ளது. அவை பற்றி மேலும் தெரியவருவது-

12.02.2004 அன்று இடம்பெற்ற ஒன்றியத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

தற்போது மாணவர்களிடையே வளர்ந்துவரும் கல்வி வீழ்ச்சி, ஒழுக்கமின்மை, சீரற்ற நடத்தை, கல்வி நிறுவனங்களைக் கட்டுக்கோப்புடன் பேணவென இந்த நடை முறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1. காலை 6 மணிக்கு முன்னரும், மாலை 6.30 இற்குப் பின்னரும் வகுப்புக்கள் எந்தக் காரணம் கொண்டும் நடத்தல்கூடாது.

2. சகல தனியார் கல்வி நிறுவனங்களும் பதிவுசெய்யப்பட்டவையாக இருத்தல்வேண்டும்.

3. பிரத்தியேக வகுப்புக்களில் மாணவர் எண்ணிக்கை 5 இற்கு மேலாக இருப்பின், அது கல்வி நிறுவனமாக முறைப்படி பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

4. இதுவரை பதிவுசெய்யாத கல்வி நிறுவனங்கள் 01.03. 2004 இற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவேண்டும், தவறினால் யாழ். மாவட்டத்திலுள்ள மற்றைய கல்விக் கோட்ட ஒன்றியங்களின் நடைமுறைகளுக்கு ஒத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5. கல்வி நிறுவனப் பதிவுக் கட்டணம் - 150 ரூபாவும், மாதாந்த சந்தா ரூபா 100 ஆகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

6. பதிவுகள் யாவும் - இல. 134, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்பு கொண்டு பதிவதுடன்,

7. மாணவர்களிடம் அறவிடப் படும் அனுமதிக் கட்டணம் 50 ரூபாவுக்குமேல் அறவிடக்கூடாது எனவும்,

8. வாரத்தில் வரும் புதன் கிழமை பொது விடுமுறை நாளாகும். இந்த நடைமுறை மே மாதத்துடன் நடைமுறைக்கு வரும்.

எனவே, மேற்கூறப்பட்ட நடைமுறைகளுக்கு ஏற்ப அவற்றினை நடைமுறைபடுத்தி, மாணவர்கள் கல்வி வளர்ச்சிக்கு ஒத்துழைக்குமாறு யாழ்.நல்லூர் கோட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் கேட்டுக் கொண்டுள்ளது. (205)

# யாழ்ப்பாண மத்திய கல்லூரி மைதானம் புனரமைக்கப்படுகிறது

யாழ்ப்பாண மாவட்டத்தின் சிறந்த விளையாட்டு மைதானமாகவும், யாழ்.மாவட்ட தடகள விளையாட்டுப் போட்டிகளில் முதற்தர போட்டிகளினை நடாத்தும் மைதானமாகவும் பயன்படுத்தப்பட்டு வந்த யாழ்ப்பாண மத்திய கல்லூரி மைதானத்திலிருந்து - விமானப் போக்குவரத்திற்கான வாகனங்கள் சென்று வந்தமையால், குன்றும் குழியுமாகக் காட்சியளித்து வந்தது.

எனவே, இந்த மைதானத் தைச் சீர்செய்து புனரமைக்கும் பொறுப்பினை யாழ்.மத்திய கல்லூரி பழையமாணவர் சங்கம் பொறுப் பேற்று, அதன் முதற்கட்டப் பணியாக - மைதானத்தின் குன்றும் குழியுமான பகுதிகளுக்கு மணல் கொட்டப்பட்டு சீர்செய்யப்பட்டு வருகின்றது.

மேலும், மைதானத்திலுள்ள புள்ளியிடும் கட்டடமும் (ஸ்கோட் போர்ட்) சீர்செய்யப்பட்டு மெருகூட்டப்படுகின்றது. (58)

## சலனசுவை துண்டுப் பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

மாவட்டத் திரைக்கலைச் சங்கங்களின் சம்மேளனமான 'சலன சித்திரம்' ஞாயிற்றுக்கிழமை தோறும், 'சலன சுவை' என்னும் துண்டுப் பிரசுரம் ஒன்றைத் தொடராக வெளியிடவுள்ளது.

முதலாவது துண்டுப்பிரசுரம் இம் மாதம் 15 ஆம் திகதி வெளிவரவுள்ளது. இதனை இலவசமாகப் பெற்றுப் பயனடையவிரும்புவோர் - சலனசித்திரம், த.பெ.இல:37 அல்லது சலனசித்திரம், கொடிகாமம் வீதி, கரவெட்டி எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

## ஈராக்கின் பலூஜா நகரில் அமைந்துள்ள

# பொலிஸ் நிலையம் மீது தாக்குதல்

# 22 பேர் பலி, முப்பதுபேர் படுகாயம்!

ஈராக்கின் பலுஜா நகரில் இஸ்லாமிய தீவிர வாதிகள் பொலிஸ் நிலையமொன்றின் மீது மேற்கொண்ட தாக்குதலில் 22 பேர்வரை கொல்லப்பட்டும் 30 பேர்வரை காயமடைந் துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்து டன், பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் நடத்தியோர் அங்கிருந்த சிறைக் கைதிகளை யும் மீட்டுச்சென்றுள்ளனர்.

வாகனமொன்றில் வந்த துப்பாக்கிதாரிகள் தன்னியக்க துப்பாக்கி, கிரனைட் ஆகியவற் றின் உதவியுடன் தாக்குதலை மேற்கொண்ட தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத் தில் காயமடைந்தவர்களில் அனேகமானவர் கள் பொலிஸார் எனவும், தாக்குதல்களை நடத்தியவர்களில் இருவர் கைதுசெய்யப்பட் டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, அரசிற்கு எதிரான சக்திகள் ஈராக்கில் வலுவடைந்து வருவதாகவும் அமெ ரிக்காவுக்கு சார்புடைய அதிகாரமாற்றமொன்றை மேற்கொள்வதற்கு மேற்கொள்ளப்படும் முயற் சிகளை அந்தச் சக்திகள் எதிர்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் இடைக்கால அரசின் அங்கத்த வரான சலாபி சுல் ஜசிரா பத்திரிகைக்கு தெரிவித்த பேட்டியில் யூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் தேர்தல் நடத்தப்படலாமென தெரிவித்தார். தேர்ந்தெடுக்கப்பட்ட குழு ஒன்றி டம் ஆளும் அதிகாரம் வழங்கப்படும் எனவும் அக்குழு மக்களின் அபிப்பிராயங்களை பிரதி பலிக்கும் எனவும் தெரிவித்தார்.

இதற்கு மாற்று வழியாக விரிவாக்கப்பட்ட ஆளும் சபையிடம் அதிகாரம் தேர்தல் நடை



பெறும்வரை கையளிக்கப்படும் எனவும் தெரி வித்தார். இந்த வகையான ஆளும் சபைக்கு 13 அங்கத்தவர்கள் ஆதரவு தெரி வித்துள்ள னர்.

## புஷ் தேசியப் படையில் பணிபுரிந்தமை குறித்த அறிக்கையை வெள்ளைமாளிகை வெளியிட்டது!

அமெரிக்க ஜனாதிபதி புஷ் தேசியப் படையில் கடமையாற்றியது தொடர்பான அறிக்கைகளை வெள்ளைமாளிகை வெளி யிட்டுள்ளது. இந்த அறிக்கையில் 1963 - 73 காலப்பகுதியில் தேசியப்படைக்கான பயிற் சிகளை அதிபர் புஷ் பெற்றிருந்த பொழுதும் படையில் இணைந்து சேவை ஆற்றவில்லை என வருகின்ற தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளராக போட்டியிடும் யோன்கெறி, தனது தேர்தல் பிரசாரமாக அண்மையில் தெரிவித்து வந்துள்ளார்.

மேலும், வியட்னாம் போரில் இணைந்து கொள்வதை தடுப்பதற்காவே தேசியப்படை யில் இணைந்ததாக தெரிவிக்கப்பட்டது. ரெக் சாஷ், சுலபாமா அகியவற்றின் தேசிய வான் படையில் விமானிக்கான பயிற்சிகள் பெற்றி ருந்தபோதும், விமானியாக போர்முனைக்கு செல்லவில்லை என தெரிவிக்கப்பட்டது.

2000 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் இந்தப்பிரச்சினை ஏற்பட்ட போதிலும், தற் போதைய ஜனாதிபதி வேட்பாளரும், வியட் னாம் போரில் ஈடுபட்டவருமான ஜோன் கெறி தனது தேர்தல் பிரசாரமாக இதனைத் தெரி வித்துவருகின்றார்.

மேலும், 1973 ஆம் ஆண்டு தேசியப் படையிலிருந்து விலகி கார்வாட் வர்த்தகப் பாடசாலையில் இணைந்து கொண்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 67 பொதுமக்களை 3 ஆண்டுகளில் கொலை செய்த சீன நபர்!

38 வயதுடைய 'யாங் சிங்காய்' 67 பொது மக்களை கடந்த 3 ஆண்டுகளாக சீனாவின் நான்கு மாகாணங்களில் கொலைசெய்துள் [illegible] அனேகமாக கொலைகளுக்கு "சுட்டி யலை" ஆயுதமாக பாவித்திருந்ததாகவும், பலவேளைகளில் ஒரு குடும்பத்தின் மொத்த அங்கத்தவர்களையும் கொலை செய்துள்ளதா கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"யாவ்" காதலித்த பெண் ஏமாற்றிய பின் னரே இந்தக் கொலைகளை செய்துள்ள தாக கருதப்பட்டபோதிலும், நோக்கங்கள் எதுவு மின்றி மரணமடையும் சமயத்தில் ஒருவரின் வேதனைகளை ரசிப்பதற்காகவே கொலை களை மேற்கொண்டு வந்ததாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதுவரை 23 பாலியல் வல்லுறவுகளில் ஈடுபட்டுள்ளதாகவும் சௌாவின் 'கான்ஷ்' நக ரில் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டபின் தனது கொலை விசாரணையிலே தெரிவித்துள் ளார். 'யான்ஸ் சிங்காய்க்கு எதிரான குற்றங் கள் நீதிமன்றில் நிரூபிக்கப்பட்ட பின் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

## சர்வதேச தெற்கு நிறுவனங்களுக்கு சூடான் அரசு

# மோதல் நடைபெறும் பிரதேசத்தில் மனிதாபிமானப்பணிக்கு அனுமதி!

உலக நோக்கு

சூடானின் அரச படையுடன், போராளிகள் மோதல்களை மேற்கொண்டுவரும் 'டர்பூர்' பிர தேசத்தில் மனிதநேய பணிகளை மேற்கொள் வதற்காக உதவி ஸ்தாபனங்கள் தடையின் றிச் செயற்படுவதற்கு சூடானிய அரசு ஒழுங்கு களை மேற்கொண்டுள்ளது.

பத்துப் பிரதேசங்களில் இந்த வகையான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் இடம்பெயர்ந்த மக்கள் நிவாரணங் களை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் சூடா னிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அரச படைகளுக்கும், போரளிகளுக்கும் இடையே நடைபெற்றுவரும் மோதல்களினால் - 8 லட் சம் மக்கள் தமது இருப்பிடங்களில் இருந்து வெளியேறி வேறு பிரதேசங்களில் புகலிடம் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டாலும், அவை இதுவரை அரசினால் உறுதிப்படுத்தப்பட வில்லை என உதவி நிறுவனமொன்று பி.பி. ஸிக்கு தெரிவித்திருந்தது. இதே நேரத்தில் அரசினால் அறிவிக்கப்பட்டிருந்த பிரதேசங் கள் சிலவற்றில் தொடர்ந்தும் போர் நடவ டிக்கைகள் மேற்கொள்ளப்போவதாக தெரிவித் திருந்தனர்.

இதனிடையே, சூடான், சாட் எல்லைப் பகுதியில் 1 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக காணப்படுவதாக பி.பி.ஸியின் "அன்டியூ கார்டிங்" தெரிவித்தார். பலர் வீடு கள் இன்றி பரந்த வெளிகளில் வாழ்வதாக



வும் அரசபடையின் ஆகாயக் குண்டுத் தாக்கு தலின் பின் அராபிய அரச படைக்குச் சார் பான குழுக்கள் குதிரைகளில் வந்து தாக்கு தல்களை நடத்தியுள்ளனர் என பாதிக்கப்பட்ட மக்கள் பி.பி.ஸி நிருபருக்கு தெரிவித்தனர்.

மேலும், இம்மக்கள் வாழும் பிரதேசப் பாதைகளினூடாக போக்குவரத்தை மேற் கொள்ளமுடியாத காரணத்தால் "சாட்டி"னூ டாக உணவுப் பொருட்களை வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் உலக உணவு ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

## செச்சினிய முன்னாள் ஜனாதிபதி கார்க் குண்டுத்தாக்குதலில் பலி!

செச்சினியாவின் முன்னாள் ஜனாதிபதியும் 1996 ஆம் ஆண்டு துணை ஜனாதிபதியாகவும் பணிபுரிந்து தற்போது கட்டாரில் வசித்து வரு பவருமான செலிமன்கான யன்டெர்பிஜே காரில் பயணம் மேற்கொண்டிருந்த வேளையில் குண் டுத்தாக்குதலில் மரணமடைந்துள்ளார்.

கட்டாரின் தலைநகர் டோகாவில் மெய்ப் பாதுகாவலர் இருவருடனும், மகனுடனும் பய ணம் மேற்கொண்டபோதே தாக்குதல் நடத் தப்பட்டது. இதில் மெய்ப்பாதுகாவலர்கள் இருவரும் கொல்லப்பட்டதுடன் மகன் காயத் துக்குள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில்

# 5122 ஜோடிகள் முத்தமழை காதலர் தினத்தில் புதிய சாதனை!



(மணிலா)

காதலர் தினம் நேற்று உலகம் முழுவதும் கோலா கலமாகக் கொண்டாடப்பட்டது. காதலர் தினத்தையொட்டி உலகின் பல்வேறு நகரங்களில் பரிசுப் பொருள் விற் பனை கடந்த சிலநாட்களாக அதிகரித்தது. நேற்றுமுன் தின் விடிய விடிய கடைகளில் பரிசுப்பொருட்கள் மற் றும் ரோஜா மலர்களின் விற்பனை அமோகமாக நடை பெற்றது.

காதலர்கள் நேற்று ஒருவருக்கொருவர் பரிசுப் பொருட் களை கொடுத்து மகிழ்ந்ததோடு நிறுத்திக் கொள்ள வில்லை முத்தங்களையும் பகிர்ந்துகொண்டனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் காதலர் தினத்தையொட்டி புதிய உலக சாதனை நிகழ்த்த ஏற்பாடு செய்யப்பட் டது. அதன்படி 5122 காதல் ஜோடியினர் மணிலா நகர வீதியில் திரண்டனர். காதலர்களில் இளம் வயதினரும் இருந்தனர். வயதாகிப் போனோரும் உண்டு. காதலுக்கு கண் இல்லை, வயதும் இல்லை.

அந்த காதல் ஜோடியினர் அனைவரும் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்து இடைவிடாமல் ஒரேநேரத்தில் முத்தம் கொடுத்தனர். 5122 ஜோடி மொத்தமாக முத்த மழை பொழிந்ததால் 'இச் இச்' சத்தம் அந்தப் பகுதி முழுவதும் எழுந்தது. இந்த முத்தமழை 10 வினாடிகள் நிகழ்ந்தது.

இதில் வேடிக்கை என்னவென்றால் பிலிப்பைன்ஸ் நகர மேயர் தனது காதலியுடன் வந்து இந்த 'முத்த விழா' வை தொடங்கிவைத்தார்.

சிலி நாட்டில் கடந்தமாதம் 4445 ஜோடியினர் ஒரே நேரத்தில் முத்தம் கொடுத்து சாதனை ஏற்படுத்தி இருந்தனர். இப்போது காதலர் தினத்தில் மணிலாவில் பெய்த முத்தமழை சிலியில் ஏற்படுத்திய சாதனையை முறியடித்துவிட்டது.

காதலர் தினத்தை ஒட்டி பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் வித்தியாசமான போட்டிக்கு ஏற்பாடு செய்யப் பட்டது. காதல் சின்னமான இருதயத்தின் பாதிப் படம் போட்ட அட்டைகள் கடைகளில் வற்கப்பட்டன. இதன் மறுபாதி படம்போட்ட அட்டையை கடைகளில் தேடிக் கண்டு பிடித்து அவற்றை ஒன்று சேர்க்கவேண்டும். இதயங்களை இணைக்கும் இந்தப் போட்டியில் வெற்றி பெற்றபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.


## 31 ஆம் நாள் நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பிதழும்

தோற்றம் 24 . 05 . 1932



மறைவு 16 . 01 . 2004

### அமரர் வல்லிபுரம் மார்க்கண்டு

(முன்னாள் Co - Op லொறிச் சாரதி, யாழ்ப்பாணம்)

நாயன்மார்கட்டு - யாழ்ப்பாணம்

இன்று (15.02.2004) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

73, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். (630)

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# 13 மாவட்டங்களில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவதற்குத் திட்டம்!

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 13 மாவட்டங்களில் தனித்துப் போட்டியிட இருப்பதாகத் தெரிய வருகிறது.

கொழும்பு, கம்பஹா, கண்டி, அம்பாறை உள்ளிட்ட 13 மாவட்டங்களிலேயே முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்திருக்கிறது.

முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஹசன் அலி இது குறித்துத் தகவல் வெளியிடுகையில், தமது கட்சி ஆறு அம்சத்திட்டம் ஒன்றை முன்வைத்ததற்கு அமைவாக ஒன்பது மாவட்டங்களில் பிரதான கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்கான இணக்கப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

இந்த ஆறு அம்சத்திட்டத்தில் எதிர்காலத்தில் நடைபெறும் சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களை தனித்தரப்பாக பங்குபற்ற இடமளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் உள்ளடக்கப்பட்டிருக்கிறது.

விரைவில் இந்த விடயம் குறித்து தமது கட்சி, பிரதான அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தவிருப்பதாகவும் தெரிவித்தார்.

# முஸ்லிம்களின் தொழுகைக்கு பொதுத்தேர்தலால் பாதிப்பாம்

## முன்னாள் அமைச்சர் அஸ்வர் தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம்கள் ஜும்மாவுக்கு செல்லும் தினமான ஏப்ரல் இரண்டாம் திகதி தேர்தல் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதால், ஜனாதிபதி மீண்டும் முஸ்லிம்களுக்கெதிரான செயற்பாட்டை மேற்கொண்டதாக, முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

புத்தளம் நரக்கலிப்பகுதியில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது - ஜனாதிபதி ஏற்கனவே சிறுபான்மையினருக்கு எதிரான செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார். இதன் எடுத்துக்காட்டாக தீபாவளி தினத்தன்று அரசாங்கத்துக்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினார்.

மக்கள் தொடர்பாடல் அமைச்சராக இருந்த இம்தியாஸ் பாக்கீர் மாக்கரை பதவியிலிருந்து நீக்கி, அப்பதவிக்கு தற்போது பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுப்பினர் ஒருவருக்கு அமைச்சர் பதவியை வழங்கியுள்ளார். இவ்வாறான செயற்பாடுகள் சிறுபான்மை இன மக்களை நசுக்கும் செயலாகவிருந்து வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (01)

# தேர்தலில் மோசடிகள் நடந்தால் வாக்களிப்பு ரத்துச் செய்யப்படும்

## எச்சரிக்கிறார் தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலின் போது வாக்குச் சாவடிகளில் மோசடிகள் இடம்பெறுமானால், அந்த வாக்குச் சாவடியின் வாக்குப்பதிவுகள் ரத்துச் செய்யப்படும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க எச்சரித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் உதவித் தேர்தல் ஆணையாளர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோரைச் சந்தித்து தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

வாக்குச் சாவடிகளில் எந்தவித இடையூறுமின்றி நேர்மையாகவும் நிதானமாகவும் தேர்தல் நடைபெற வேண்டும். இதற்கு முரணாக மோசடிகள் இடம்பெறுமானால், அந்த வாக்குச்சாவடி வாக்குப்பதிவுகள் அனைத்தும் இரத்துச் செய்யப்படும்.

வாக்குச் சாவடிகளில் - தேர்தலைக் குழப்பும் வகையில் வாக்குப் பதிவுகள் நடைபெறுமானால் அந்த வாக்குச்சாவடி, வாக்குகள் அனைத்தும் இரத்துச் செய்யப்படும். இதற்கான அனுமதியை உயர்நீதிமன்றம் வழங்கியுள்ளது.

இதேவேளை, வாக்குச்சாவடிகளில் திருப்தியற்ற முறையில் தேர்தல் நடைபெறுவதற்கு உடந்தையாக இருக்கும் பொலிஸ் அதிகாரிகளும் பதவி நீக்கப்படுவர் எனவும் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (01)

# கண்ணிவெடி அகற்றும் மூன்றாவது பிரிவு வவுனியாவில் பயிற்சி முடித்து வெளியேறியது

சுவிற்சர்லாந்து நாட்டின் அனுசரணையுடன் மன்னார், வவுனியா மாவட்டங்களில் நடைபெறும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான மூன்றாவது பிரிவு கண்ணிவெடி அகற்றும் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறியது.

இந்த நிகழ்வு வவுனியா மாவட்டத்திலுள்ள கண்ணிவெடி அகற்றும் (எப்.எஸ்.டி) செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கண்ணிவெடி அகற்றும் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த 44 பேருக்கும் இந்த நிகழ்வில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

வவுனியா மாவட்ட பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும், வவுனியா, மன்னார் மாவட்டங்களின் அரச அதிபர்கள், இரு மாவட்டங்களதும் பிரதேச செயலர்கள் மற்றும் பொலிஸ், இராணுவ அதிகாரிகள் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

எப்.எஸ்.டியின் தேசிய இணைப்பாளர் பாலா இந்த நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பாகத் தெரிவித்ததாவது,

இந்த வருடம் ஜனவரி மாதம் வரை இரு மாவட்டங்களிலும் 97, 628 சதுர மீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. இதுவரை 3374 கண்ணிவெடிகள், 8 வாகன எதிர்ப்புக் கண்ணிவெடிகள், வெடிக்காத நிலையிலிருந்து 2062 பெரிய வெடிபொருட்களும், 5611 சிறிய வெடிபொருட்களும் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டன.

இரண்டு மாவட்டங்களிலும் 312 கிராமங்கள் - கண்ணிவெடிகள் அகற்றுவதற்கு அடையாளம் காணப்பட்டுள்ளன. இதில், 179 கிராமங்கள் அதிகூடிய கண்ணிவெடிப் பிரதேசமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதுவரை 2 மாவட்டங்களிலும் 43 பேர் கண்ணிவெடிகளால் இறந்துள்ளனர். 40 பேர் படுகாயமடைந்துள்ளனர். பல பொதுமக்கள் தமது கால்களை இழந்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

# 50 ஆயிரம் மாணவருக்கு சிசு சவிய புலமைப் பரிசில்

## கல்வி அமைச்சர் தகவல்

'சிசு சவிய' புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் - 50 ஆயிரம் மாணவர்கள் நன்மைபெறவுள்ளதாக, கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்வதற்கு ஏற்றவகையில் கல்வி முறையை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துவருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் கணினி அறிவு மற்றும் ஆங்கிலக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

ஆண்டு ஐந்தில் நடத்தப்படும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறும் கிராமப்புறமாணவர்கள், நகரப்புறத்தை நோக்கி படையெடுக்கின்றனர். இதனால் நகரப்புறப் பாடசாலைகளில் பலத்த போட்டி உருவாகியிருப்பதாகவும் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு மேலும் தெரிவித்தார்.

# கட்சிகளின் சின்னத்தை மாற்ற அரசியல் கட்சிகள் கோரிக்கை

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

எதிர்வரும் பொதுத் தேர்தலின் போது தமது கட்சிகளின் சின்னங்களை மாற்றுவதற்கு நான்கு அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா தெரிவித்தார்.

தேர்தல் சின்னங்களை மாற்றுவதற்காக வழங்கப்பட்ட காலக்கெடு நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியுடன் முடிவடைந்தது. மாற்றியமைக்கப்பட்ட புதிய சின்னங்கள் தொடர்பாக குறிப்பிட்ட கட்சிகளுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும், தேர்தல் அதிகாரிகளுக்குமான சந்திப்பு எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# கைதி மரணம்

தங்காலைச் சிறைச்சாலைக்குள் கைதிகளுக்கிடையே இடம்பெற்ற மோதல் சம்பவங்களின்போது விளக்கமறியலில் இருந்த கைதியொருவர் உயிரிழந்தார். இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (01)

## தென்னாபிரிக்க...

காணிப்பாளர்களை அனுப்புமாறு கேட்டுள்ளதாகவும் அந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தென்னாபிரிக்க அரசிடம் இருந்து உத்தியோக பூர்வமாக இலங்கை அரசாங்கமும் இது போன்ற அழைப்பைப் பெற்றது.

ஆனால், தற்போது இலங்கை அரசாங்கத்திடம் வெளிநாட்டுக் கொள்கை பலவீனமான நிலையில் இருப்பதால், இந்தச் சூழ்நிலையை எவ்வாறு கையாளப்போகின்றது என அரசியல் விமர்சகர்கள் கேள்வியெழுப்பியிருப்பதாகவும் அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது.

## பஸ் வண்டி - ஜீப் விபத்தில் பொலிஸார் உயிரிழப்பு

கதிரவெலவில், சொகுசு பஸ் வண்டியொன்றும், பொலிஸ் ஜீப் வண்டியும் மோதிக் கொண்டதில் பொலிஸார் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமடைந்த இரண்டுபேர் கவலைக்கிடமான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

## 13 எதிர்க்கட்சி...

உறுப்பினர்களான மகிந்தானந்த அளுத்கமகே, பிரசன்ன ரணதுங்க ஆகிய பொதுஜன ஐக்கிய முன்னணிப் பிரமுகர்கள் மீதும் -

ஜனாதிபதி சந்திரிகாவின் முன்னாள் செயலாளரும், ஆலோசகருமான குசும்சிறி பாலபத்த பெண்டி, ஜனாதிபதியின் ஆலோசகர் மனோ தித்தவெல, ரெரினி பீரிஸ் ஆகியோர் மீதும் - ஜே.வி.பி. பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச மீதுமே இந்த லஞ்ச ஊழல் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இவர்களுக்கு எதிராக 110 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருப்பதாகவும் அது தொடர்பான 13 கோவைகள் லஞ்ச ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. (01)

## ஐ.தே.க....

மாக விமர்சித்துள்ளார் என்பதும் குறிப்பிடப்பட்டிருந்தது.

முன்னாள் அமைச்சர்கள் வீரசிங்க மல்லிமாராச்சியின் மகனான ஜனகமல்லிமாராச்சி கடந்த 25 ஆண்டு காலமாக அரசியலில் ஈடுபட்டு வருகிறார். இவர் கொழும்பு மாவட்ட வேட்பாளர் பட்டியலில் தமது பெயரும் இடம்பெறவேண்டும் என்று கட்சித் தலைமையிடம் கேட்டிருந்தார்.

ஆனால், இதற்கு ஐக்கிய தேசியக் கட்சி இணங்காததாலேயே தனது பதவியை இராஜினாமாச் செய்ததாகத் தெரியவருகிறது.

## இலங்கை அரசியல்...

பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் - கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கு விபரமாக விளக்கிக் கூறியதாகவும் தெரியவருகிறது.

தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் திடீர் அரசியல் ஸ்திரமற்ற நிலைமையாலும், நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருப்பதாலும் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தமது ஐரோப்பிய பயணத்தை முடித்துக்கொண்டு இன்று நாடு திரும்பவுள்ளார்.

இன்று வன்னி வரும் சு.ப.தமிழ்ச்செல்வன், கூட்டமைப்பின் தலைவர்களுடன் இரு தினங்கள் கலந்துரையாடவுள்ளதாக கூட்டமைப்பின் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சந்திப்பிற்கான ஏற்பாட்டு ஒழுங்குகளை செய்துதருமாறு கூட்டமைப்பு - விடுதலைப் புலிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும், தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எதிர்வரும் 18 ஆம் திகதி கூட்டமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்த சங்கரியுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் சின்னம் குறித்து இறுதி முடிவு எடுப்பதற்கான பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (01)

Spoken English
With Grammar
Lectures By :-
Mr. M.A.HARI
புதிய பிரிவு ஆரம்பம்
16.02.2004 திங்கள்
மாலை 4.30 மணி
Monday / Wednesday } 4.30 p.m - 5.30 pm
HARY'S INSTITUTE
இல,564, கஸ்தூரியார் வீதி,
(யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்)
யாழ்ப்பாணம். (சி/2224)

GLOBAL VILLAGE COMPUTER EDUCATION
CCS
College of Computer Studies
302/1, Navalar Road, Anaipanthi, Jaffna.
சான்றிதழ் வழங்கும் வைபவம்
இடம் :- நாவலர் கலாச்சார மண்டபம்
நாவலர் வீதி, நல்லூர்
காலம் :- 15.02.2004 ஞாயிறு பி.ப 03.30 மணி
தலைமை :- திரு.க.கைலைவாசன் (இயக்குனர்)
ஆசியுரை :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.
குரு முதல்வர் நல்லை ஆதீனம்
பிரதம விருந்தினர்
பேராசிரியர் சு.இராசதுரை.
பீடாதிபதி, விவசாயபீடம். யாழ். பல்கலைக்கழகம்.
கௌரவ விருந்தினர்
பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ண ஐயர்
பீடாதிபதி கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்
கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
Director & Staff
(சி-2226)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.